# பரிவாதினி



விக்கிரமன்

# பரிவாதினி

(சரித்திர நாவல்)

## நாவலைப்பற்றி...

பல்லவர்களின் காலத்தில் கலை, இலக்கியம், பண்பாடு ஆகியன மிகச் சிறப்பாய் வளர்ச்சி பெற்றன.

பல்லவ மன்னர்களுள் மிகச் சிறந்தவரான மகேந்திரவர்மனும், சிறந்த கலை ரசிகனாக விளங்கினான். இசையிலும் பேரார்வம் கொண்டவனாக விளங்கிய அவனுடைய பெருமைகளையும் பேராற்றலையும் குடுமியாமலையிலுள்ள கல்வெட்டுகள் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. அந்தக் கல்வெட்டுகளும், சித்தன்னவாசலிலுள்ள காலத்தால் அழியாத கலையெழில் கொழிக்கும் கண்கவர் சிற்பங்களுமே இந்நாவல் தோன்றக் கருவாக இருந்தன.

மேலும், மகேந்திரவர்மன் அழியா வண்ணங்களின் ரகசியத்தையும், புதிய வீணை ஒன்றையும் கண்டுபிடித்தான். வரலாற்றுச் சான்றுகளாக உள்ள அவற்றையெல்லாம் வெளிப்படுத்துவதே இந்த நாவல்.

பெருமைக்குரிய கலைச் செல்வங்களை உருவாக்கி, தமிழ் மண்ணின் பெருமையைத் தரணியெங்கும் பரப்பிய பல்லவர்களின் கலையார்வப் பெருமைகளைப் பற்றி அறிந்து மகிழ –

இனி, பக்கங்களைப் புரட்டுங்கள்.



# பரிவாதினி

## 1

பிறைமதி போன்று வளைந்திருந்த விந்திய மலைச் சாரலின் அடிவாரத்தை ஒட்டி அந்தக் கானாறு நெளிந்து நெளிந்து ஓடிக் கொண்டிருந்தது. பெருங் கற்பாறைகளின் இடையில் அது புகுந்து வரும்போது வெற்றிப் பெருமிதத்தில் உறுமியது. சுற்றிச் சுழன்று பள்ளத்தில் வீழ்ந்து மேலே தன்னைத் தடுத்தவர்களை நோக்கிச் சிரித்துவிட்டு விரைந்தது. அந்தச் சிரிப்பின் ஒலி ஒரு சமயம் 'சலசல'வென்றும், ஒரு ஒரு சமயம் 'குளுகுளு'வென்றும், வெவ்வேறு சமயம் 'ஹோ ஹோ'வென்றும் ஒலித்து, அந்தப் படர்ந்த புதர்களும், உயர்ந்த மரங்களும் நிறைந்த பகுதிகளில் எதிரொலிக்கும். காட்டாற்றின் இருமருங்கிலும் பெரும் பாறைகளுக்குப் போட்டியாக அடர்ந்து வளர்ந்திருந்த மரங்கள் இருளுக்குத் துணையாக நின்றன. வானளாவிய மரங்களை உறுதுணையாகக் கொண்டு பசுங்கொடிகள் வளர்ந்திருந்தன. அவற்றில் விதவிதமான மலர்கள் பூத்து வீணே காய்ந்து கருகி வீழ்ந்தன. கனிதரும் இனிய மரங்களின் கனிகள் அவ்வப்போது கீழே வீழ்ந்து தன் இனத்தைப் பெருக்கிக் கொண்டிருந்தன. இவற்றையெல்லாம் இதுவரை அறிந்து ரசிக்க ஆளில்லாதிருந்தது. இப்போதோ அந்த இளைஞன் காட்டாற்றின் மறு கரையினின்று மலைப்பகுதியை உற்று நோக்கிய வண்ணமிருந்தான். மெல்ல மெல்லச்

சூழ்ந்திருந்த இருள் விலகியது. பொழுது புலர்ந்துவிட்ட தென்பதற்குச் சான்றாக புள்ளினங்கள் சுறுசுறுப்பாகத் தத்தமது பணியைத் தேடிக் கிளம்பின. தோகையும், மஞ்ஞையும் கானாற்றின் ஓரம் அழகு நடை போட்டன. இலையுதிர் காலத்து மரக்கிளை போல் தோன்றும் மகுடமணிந்த கலைமானினம் ஒருமுறை கம்பீரமாக எங்கோ எதையோ நோக்கும். மறுகணம் ஆற்று நீரில் ஒரு வாய் குடித்துவிட்டுப் பூமியில் கால்கள் படுகின்றனவோ என ஐயுறும்படித் துள்ளியோடிக் காட்டினுள் மறைந்துவிடும்.

மெல்ல மெல்லப் பொழுது புலரும். மங்கிய ஒளியில் அந்தச் சொப்பனபுரி புலப்படத் தொடங்கும். பிறைமதி போன்று வளைந்திருந்த அந்த மலைச்சரிவில், இந்திரபுரியோ என்று தோற்றமளிக்கும் காட்சியொன்று தோன்றும். அந்த இளைஞன் அதைக் காணவே அவ்வேளையில் நாள்தோறும் அங்கு வருவான். மூடிக்கிடந்த திரை விலகியவுடன் அற்புதக் காட்சியைக் கண்டு மக்கள் 'ஆகா' என்று துள்ளுவதுபோல் மலைச்சரிவில் குடைந்தெடுக்கப்பட்ட விஹாரங்களையும், சைத்யங்களையும் காணுந்தோறும் அவனுக்கு வியப்பதிகமாகும்; பெருமூச்சு பொங்கி வீசும்.

இப்படியே எத்தனையோ நாள்கள்; புலர்ந்த பொழுது புலப்படுத்தும் போகபுரியின் இன்பங் காண முதல் நாள் இரவே வந்து விடுவான். பொழுது புலர்ந்து நன்றாக விடிந்தவுடன் அந்த இடத்தை விட்டு நகர மனமின்றிச் செல்வான்.

அன்றும் - கானாற்றின் அந்தக் குறுகிய இடத்தைக் கடந்து விஹாரத்தை அடைய அமைக்கப்பட்டிருந்த படிக்கட்டுகளை அடைந்தான் அந்த இளைஞன். அந்தப் பகுதி வெளியேயிருந்து காணுபவர் கண்களுக்குத் தெரியாது. முதல் படிக்கட்டில் ஏறும்போது தன்னை யாரோ அழைப்பது போன்ற ஓசை கேட்கவே இளைஞன் திரும்பிப் பார்த்தான்.



வியப்பும் பயமும் கலந்த முகத்துடன் கையில் குடம் ஏந்தி அவள் அங்கே நின்று கொண்டிருந்தாள். அவளை இதற்கு முன்பு பல முறைகூட அவன் கண்டிருக்கிறான். எங்கே கண்டிருக்கிறான்? சொப்பன புரியிலா; கனவு உலகத்திலா அல்லது துன்பத்தின் நிழலே படாத சொர்க்க பூமியிலா? ஆம்; ஆம்... அவளோடு நயன மொழியிலே பேசியிருக்கிறானே! தெரிந்து விட்டது அவள் முதிய ஓவியரின் மகள்!

அவ்வளவு எளிதில் அந்த இடத்தை அடைய முடிந்ததா? கொடிய விலங்குகள் வாழும் அந்தக் காட்டுப் பிரதேசத்தை அடைய எத்தனை இடர்கள் - எத்தகைய கட்டுப்பாடுகள்? யுகயுகமாக வானத்தை நோக்கித் தவஞ் செய்து கொண்டிருந்த அந்தக் கற்பாறைகளுக்கு அதிர்ஷ்ட காலம் பிறந்தது. பலநூறு ஆண்டுகளாகக் கவனிப்பாரற்றுக் கிடந்த அந்த இடத்தில் சிற்றுளியின் கிண்கிணி ஓசை கேட்டது. பாறையை உடைக்கும் பேரொலி எழுந்தது. பிறகு அமைதி. நூற்றுக் கணக்கானவர்கள் பணியாற்றிய அந்த இடத்தில் இப்பொழுது பேரமைதி. பாறையைக் குடையும் பணியிலீடுபட்ட நூற்றுக்கணக்கான வர்கள் கண்களைக் கட்டி வெளியேற்றப்பட்டனர். இப்போது மலைச்சரிவில் குடையப்பட்டிருந்த சைத்யங்களிலும், விஹாரங்களிலும் பாறையைச் சமன் செய்து களிமண்ணால் மெழுகி அதன்மீது சுண்ணாம்பினால் பூசி ஓவியங்கள் தீட்டும் வேலை நடந்து கொண்டிருந்தது. வயதான நான்கு ஓவியர்களும், அவர்களுக்குத் துணையாக எட்டுப் பேரும் கற்பாறையிலே கந்தர்வ லோகத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள்.

அந்த இளைஞனும் தலைமை ஓவியர்களுக்கு உதவுபவர் களில் ஒருவனாகவே அங்கு வந்து சேர்ந்தான். நாள்தோறும் பொழுது புலரும் பொழுதே ஓவியர்கள் தங்கள் பணியை மும்முரமாகத் தொடங்கிவிடுவார்கள். அவர்கள் ஒருவருடன் ஒருவர் பேசிக் கொண்டதையோ வீணாகப் பொழுது போக்கியதையோ இதுவரை அவன் கண்டதில்லை.

எப்போதாவது தலைமை ஓவியர் அவனைப் பெயர் சொல்லி அழைப்பார். அவருக்கு அவன் பெயர் தெரிந்ததுவிதுமே சுவையானது. அவனை முதன்முதலில் பார்த்தவுடனேயே ஓவியருக்குப் பிடித்து விட்டது. அதிகப் பரிவைக் காட்டினால் அரச ஆபத்து நேரும் என்று அவர் வெளியே புலப்படுத்த வில்லை. அந்த இளைஞன் அவரை அணுகி வணங்கி, கைகட்டி வாய் பொத்தி நின்றவுடனேயே அவனை அந்தப் பெரியவர் கேட்ட முதல் வார்த்தை, "தம்பீ! உன் பெயர் என்ன?"

எளிமையும் கம்பீரமும் நிறைந்த அந்தக் குரல் ஏனோ அந்த இளைஞன் உள்ளத்தைக் கலக்கியது. 'என்ன பெயர்? உன் பெயர் என்ன?' என்ற கேள்வி வட்டம் அவனது நெஞ்சத் தடாகத்தில் எழுந்து எழுந்து விரிந்தது. சட்டென அவன் கூறிய பெயர்: "குணபரன்."

ஓவியர் மௌனமாக இருந்தார். பிறகு அவனைச் சைகை மூலம் தன்னுடன் சேர்ந்து புறப்படுமாறு கட்டளையிட்டார். காடும், மேடும், கானும், காவும் கடந்து அவர்கள் அடர்ந்த கானகத்தருகே வந்தபோது அவன் கண்கள் கட்டப்பட்டன. அவன் கையைப் பிடித்து முதுமை ஓவியர் விரைந்து அழைத்துச் சென்றார். இடையில் அந்த முதிய கரம் மாறி மென் கையொன்று அவனுக்கு வழிகாட்ட முனைந்ததையும் அவன் அறிந்தான்.

கண்கட்டுகளை அவிழ்த்தபோது இருண்ட குகையொன்றில் இருக்கும் உணர்ச்சியை அடைந்தான். பொழுது ஏற ஏறத்தான் இருண்ட குகைகளில் நடைபெறும் மாபெரும் பணியை அவன் அறிந்தான்.

அவன் பெயரை அந்த முதிய ஓவியர் அறிந்திருந்தபடியால், "குணபரா" என்று அன்பாக அவனை எப்போதாவது கூப்பிடுவார். இப்படி அவர் கூப்பிட்டால் வர்ணக் கலவை தீர்ந்துவிட்டதென்று பொருள். உடனே வர்ணங்கள் கலந்து வைக்கப்பட்டிருக்கும் பாண்டத்திலிருந்து வர்ணம் எடுத்துக் கொடுப்பான் அவன். மற்ற ஓவியர்கள் யார், அவர்களுடைய



உதவியாளர்களின் பெயர்கள் என்ன என்பதைக்கூட அவன் அறியமாட்டான்.

அந்த இளமங்கை நல்லாள் எப்போதாவது வர்ணந் தீட்டப்படும் இடத்தில் நடமாடுவதும் உண்டு. வெறும் பாறைகளை மட்டும் கண்டிருந்த அவன் கண்கள் அந்த எழில் வடிவத்தை வட்டமிடும். வண்ண மலர்களை மட்டும் கண்டிருந்த அவன் கண் வடிவழகில் லயிக்கும். அவ்வேளையில் அந்த முதிய ஓவியர் புதிய ஓவியம் தீட்டத் தொடங்கியிருந்தார். அந்த ஓவியத் தொகுதியில் அரசகுமாரி ஒருத்தி - அவளுடைய தோழிகள்: முதியவரின் கரங்கள் கொஞ்சங் கொஞ்சமாக வண்ண விசித்திரத்துடன் அரசகுமாரிக்கு உயிர் கொடுத்து வந்தன. அந்த ஓவியமே உயிர்பெற்று நடமிடுகிறதோ என்று அவன் அதிசயிப்பான். அவனுக்குத் தானே ஆண்டவன் இப்படிக் கண்களையும், கண்கள் மூலமாக இதயத்தில் பாயும் உணர்ச்சியையும், கலைத் தாகத்தையும், கலையின் ஒவ்வொரு பகுதியையும் அறிய வேண்டும் என்ற துடிப்பையும் ஏற்படுத்தி விட்டான்! மற்றவர்கள் கண்ணும் கருத்துமாக ஓவியப் பணியில் ஈடுபட்டிருக்கும் போது குணபரன் ஒருவருமறியாமல் அந்த மலைக்குகையின் மற்ற பகுதிகளையும் சுற்றிப் பார்க்கச் செல்வான்.

அப்படிச் சுற்றிப் பார்க்கும்போது அவன் பல ஆண்டு களுக்கு முன்பே பூர்த்தியாகியிருந்த பல குகைகளைக் கண்டான். காலை வெயிலின் ஒளியில் மங்கலாக அந்தக் குகைகளின் உட்புறம் காட்சியளித்தன. அகிலும் சந்தனமும் கலந்த ஒருவித இன்பந்தரும் மணம் வீசியது. குணபரன் ஒருகணம் திடுக்கிட்டான்.

'ஆஹா! ஆஹா! இது என்ன கனவா?' என்று கண்களைக் கசக்கிக் கொள்வான். ஆம், ஆம்; கனவுதான். இல்லாவிடில் அரசர்களும், அரசகுமாரர்களும், பணிப்பெண்களும் போதி சத்துவரும், தாமரைத் தடாகமும், அல்லி மலர்களும், வெள்ளை யானைகளும், வேடர்களும் - இவர்கள் எல்லாம் எப்படி இங்கு

வரமுடியும்? வர்ண விசித்திரமாக அவர்களை எப்படிப் படைக்க முடியும்?

எங்கிருந்தோ திடீரென்று கணீரென்ற குரல் ஒலித்தது.

'புத்தம் சரணம் கச்சாமி

சங்கம் சரணம் கச்சாமி'

என்று கம்பீரமான குரலில் பிட்சுக்கள் புத்தபிரானை வணங்கும் மந்திர ஒலி கேட்டது. அந்த இடத்தை விட்டுப் பிரியவும் அவனுக்கு மனம் வரவில்லை. அங்கே இருக்கவும் முடியாது. அப்போது -

''உஷ்...'' என்று உதட்டில் கை வைத்து அந்த இளங்கொடி எச்சரிக்கை ஒலி எழுப்பி அந்தப் பகுதிக்கெல்லாம் வரக்கூடாது என்று சைகை தெரிவித்தாள்.

'நீ மட்டும் வரலாமா?' என்பதைச சைகை மூலம் குணபரன் திரும்பவும் கேட்டபோது, செம்பவளத் திருவாயில் பளிச்சென முத்துச்சரம் கோத்தது போன்ற பல் வரிசை தெரிய, அவள் மெல்லச் சிரித்துவிட்டுக் குடத்துடன் எங்கோ போய்விட்டாள். அவளைத் தொடர்ந்து ஓடி நிறுத்திப் பேச வேண்டும் என்ற, எண்ணம் அவனிடம் எழுந்தது.

தோன்றி மறையும் மின்னல் கொடியோ அல்லது கனவுக் கன்னியோ... அவனுக்குப் புதிராகவே இருந்தது.

எதிரே வானை முட்ட வளர்ந்திருக்கும் மலைகளும், அதன்மீது படியும் மேகங்களும், கீழே அதலபாதாளத்தில் ஓடும் காட்டாறும், நிசப்தமான அந்தக் குகைப் பகுதிகளும், குகைகளுக்குள் கொலு வீற்றிருக்கும் அற்புத ஓவியங்களும் அவன் உள்ளத்தைச் சிலிர்க்க வைக்கும். அப்படியெல்லாம் அற்புதம் இருக்கும் என நம்பித்தானே அவன் அங்கு வந்தான்? அறியாது வந்திருந்தால் அந்த அழகு சாம்ராஜ்யத்தைக் கண்டு அவன் இதயத்தில் அதிர்ச்சி ஏற்பட்டிருக்காதா? உணர்ச்சி



நெஞ்சை வந்தடைந்திருக்காதா? எழுநூறு வருடங்களுக்கு மேலாக அந்த வண்ண ஓவியங்கள் அழியாது விளங்குவதைக் காணத்தானே அவன் அங்கு வந்தான்? அந்த முறைகளை அறியத்தானே அவன் ஓவியருக்கு உதவியாளராக அமர்ந்தான்? பேச்சுத் துணையின்றி, அனுபவிப்பதைப் பகிர்ந்து கொள்வதற்குத் துணையின்றி அவன் மலைப் பகுதியில் திரிவதே அதற்குத்தானே! எப்போதாவது ஒருமுறை அந்த முதியவர் பேசுவார்; மற்ற குகைகளில் உள்ள ஓவியங்களைப் பற்றி; புத்த பிட்சுக்களின் உறைவிடமாக உள்ள அந்தப் பகுதிகளுக்குள் வெளியார் யாரும் போகக் கூடாதென்ற கண்டிப்பைப் பற்றி; அழியாத வண்ணங்களால் அங்கே அற்புத ஓவியங்கள் நிறைந்திருப்பதைப் பற்றி - கை வண்ணத்தில் கை தேர்ந்த அந்த முதியவர் பேசும் ஒவ்வொரு சொல்லும் குணபரனை நிலைக்கொள்ளாது திணறவைக்கும்.

## 2

கானாற்றின் கரையினின்று மேலே சைத்யங்களுக்குச் செல்லும் படிக்கட்டுப் பாதையின் முகப்பில் நின்று திரும்பிப் பார்த்த குணபரன், குடத்துடன் கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பினளாய், முதியவரின் - குருவின் - மகள் நின்றிருப்பதைக் கண்டவுடன், காலை இளவேனையில் மாந்தளிர் மேனியளாய்த் தன்னை விழுங்குவது போல் உற்று நோக்கும் அவளைக் கண்டு மெல்ல நகைத்தான்.

''நகைப்பெல்லாம் இன்றுதான்; கொடிய விலங்கின் வாய் விழுந்த பிறகு மேலுலகம் சென்றுதான் நகைக்க வேண்டியிருக்கும்'' - அவள் பேசினாள். 'கிணிங் கிணிங்' என்ற ஒலியா? மணி மாலைகள் அசைகின்றனவா? இல்லை - இல்லை, காட்டாற்றின் இனிய சலசலப்பு ஒலிதான் அங்கு கேட்கிறது!

அவள் தெய்வத் தமிழ் மொழியில் பேசினாள்.

பல திங்களுக்குப் பிறகு அத்தகைய பேச்சைக் கேட்கும்போது, குணபரனுக்கு வியப்பு தாங்கவில்லை. அவனும் அம்மொழியிலேயே பேசவிழைந்தவன் ஏனோ கொச்சைப் பிராகிருத மொழியில், ''கொடிய மிருகமா, எங்கே?'' என்று கேட்டான்.

''ஆம்; கடந்த ஏழு நாள்களாக உங்களை இந்த இடத்தில் இருள் விலகா முன்னர் நான் பார்க்கிறேன். நாடு நகரங்களில் சுற்றுவதுபோன்று இங்கெல்லாம் எதேச்சையாகச் சுற்ற முடியாது. அப்படிச் சுற்றுபவை எவை தெரியுமா? அதோ பார்த்தீர்களா?''

அவள் காட்டிய இடத்தைக் குணபரன் நோக்கினான். கொடிய வேங்கையின் பாதச்சுவடுகள், நான்கு பாதங்களின் சுவடுகள் அங்கே தெரிந்தன. அவற்றைக் காணும்போது அதன் நீள அகலம் தெளிவாகத் தெரிந்தன. இடையிடையே வேங்கைக் குட்டியின் சிறு பாதங்கள்...

குணபரனின் உடல் ஒருமுறை சிலிர்த்தது. இடையில் மறைத்து வைத்திருந்த உடைவாளைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

''எனக்கு மட்டும்தான் வேங்கையிடம் பயமா? அந்த அபாயம் உனக்கில்லையோ?'' - இப்போது குணபரன் அவளை நெருங்கினான்.

குணபரனின் அகன்ற மார்பையும், இரவில் அதிகத் தூக்க மில்லாது கலங்கியிருந்தாலும் ஒளி குன்றாக் கண்களையும், அதரத்தை ஒட்டி வேலி கட்டியதுபோல் ஓடிய அரும்பு போன்ற மீசையையும், தோள்வரை புரளும் சுருண்ட கேசத்தையும், சிந்தனைக்கும், சிந்தனையில் விளையும் திட்டத்தை நிறைவேற்றும் திட்டத்தையும் புலப்படுத்தும் அகன்ற நெற்றியையும் உள்ளத்தில் உருப்படுத்திக் கொண்டு நின்ற



அவள் குணபரனின் வினாவிற்கு விடைபெறச் சற்று நேரம் தயங்கினாள்.

''எனக்கு மட்டுமென்ன? எல்லாருக்குமே பயம்தான். காலை வேளையில அபாயமில்லை. ஆனால், நீங்கள் இரவெல்லாம் காட்டுப் பகுதியில் அலைகிறீர்களே, மனித மோப்பம் கண்ட வேங்கை எளிதில் விடாது...'' - இதைக் கூறுவதற்குள் அவள் நெஞ்சம் பட்ட பாடு...

தான் இரவில் காட்டுப் பகுதிக்குச் செல்வதை இவள் எப்படி அறிவாள் என்ற திகைப்பு அவனைச் சூழ்ந்தது. விஹாரத்துப் பிட்சுக்களைப் பின் தொடர்ந்து அந்தக் காட்டிற்குள் தான் செல்வதை இவள் எப்படி அறிவாள் எனத் திகைப்புடன் அவளை நோக்கிய குணபரன் எதிர்பாரா முன்னரே, ''பிட்சுக்கள் இரவில் இங்கெல்லாம் செல்கின்றார்கள் என்றால் கடும்புலியை வசப்படுத்தும் மணி மந்திரம் அவர்களுக்குத் தெரியும். அப்படியும் புலி நெருங்கினால் அவர்களிடமிருக்கும் பச்சிலையின் நெடி தாளாது அவை அஞ்சி ஓடிப்போய் விடும். அவர்களுக்குத்தான் அங்கு வேலை; உங்களுக்கு ஏன் தொல்லை?'' - இதைக் கேட்கும்போது அவளுடைய கண்களின் கூர்மையைப் பிளக்க முடியாத இதயம் படைத்த குணபரனால் தாங்க முடியவில்லை.

'பிட்சுக்களுக்குத்தான் அங்கு நடுநிசியில் வேலை - உங்களுக்கு ஏன் தொல்லை?' - குணபரன் ஒருமுறைக்குப் பலமுறை கூறிக் கொண்டான். அந்தக் குடைவரை மண்டபங்களில் சித்திரம் தீட்டும் ஓவியர்களுக்கு உதவியாக வந்திருக்கும் மற்ற மாணாக்கர்களைப் போல், சித்திரத்தைப் பயிலும் நேரம் போக மீதி நேரத்தில், தான் தூங்கியோ, வீண் கதை பேசியோ கழிக்கலாம் - ஆனால் அதற்கு மட்டும்தானா இங்கே வந்தோம்... அந்த ரகசியத்தை அவளிடம் கூறிவிட்டால் அவள் அப்படிக் கேட்பாளா?

அப்போது -

புத்தம் சரணம் கச்சாமி

சங்கம் சரணம் கச்சாமி

தம்மம் சரணம் கச்சாமி

என்று மேலே சைத்யத்திலிருந்து இசையுடன் இயைந்த குரலோடு பிட்சுக்களின் காலைத் துதி கேட்டது. அவள் அவசர அவசரமாகக் குடத்து நீருடன் படிக்கட்டில் விரைந்தேறிச் சென்றுவிட்டாள்.

குணபரனின் நினைவெல்லாம் இப்போது அவள் கேட்ட கேள்வியிலேயே சுற்றிச் சுற்றி வந்தது. அன்றெல்லாம் அவனுக்கு எதிலும் வேலை ஓடவில்லை.

அன்று புதிய ஓவியம் ஒன்றைத் தீட்டத் தொடங்கியிருந்தார் முதியவர். வானத்தே பறந்து செல்லும் கின்னர, கிம்புருடர்களின் அற்புதத் தோற்றங்கள்.

முதிய ஓவியரைச் சுற்றிப் பிட்சுக்கள் பலர் கூடியிருந்தனர். அவர்கள் ஏதோ ஆழ்ந்த யோசனை செய்கிறார்கள் என்பது தெரிய வந்தது. வானத்தே பறந்து செல்லும் கின்னர, கிம்புருடர்களை முதியவர் ரேகைச் சித்திரமாக முதலில் வரைந்திருந்தார். கந்தவர்களின் கரங்களிலே இசைக் கருவி திகழ வேண்டுமென்பது எல்லாரது விருப்பமுமாகும். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதக் கருத்தைத் தெரிவித்தனர். சித்திர மண்டபத்திற்கு அனைவரும் சென்றனர். பிறகு மீண்டும் பழைய இடத்திற்கே வந்தனர். சிந்தித்தனர். தரையிலே காவிக் கோடுகளிலே மாதிரியை வரைந்து பார்த்தனர். பொழுது ஓடியதே தவிர ஒன்றும் புலனாகவில்லை. தலைமைப் பிட்சுவும் அங்கே வந்திருந்தார்.

அவ்வேளை குணபரன் உதடுகள் குவிந்து இசைக்கருவி எழுப்பும் ஒலிபோல் முணுமுணுத்தன. அவன் கைவிரல்கள் ஏழிசை சுவரங்களை மீட்டுவது போல் பாவனை செய்தன.



கம்பீரத் தோற்றமுடைய பிட்சு இசையின் முணுமுணுப்பு வந்த திக்கு நோக்கிப் பார்வையைச் செலுத்தினார்.

முதிய ஓவியரை அழைத்து அவர் ஏதோ வினவுவது தெரிந்தது. உடனே குணபரன் அங்கிருந்து அகன்றான். அவர்கள் விவாதித்துக் கொண்டிருந்தபோதே கந்தர்வர்கள் ஓவியம் வரையப்பட்டிருக்கும் இடத்தை அடைந்தான். செப்பனிட்டுச் சமன் செய்யப்பட்ட பாறை; அதன்மீது உமியும், களிமண்ணும் கொண்டு பூசப்பட்ட மெல்லிய பூச்சு; சித்திரம் வரைய வேண்டிய பகுதி சமனாக இருந்தது. அதன் மீது சுண்ணாம்பு பூசப்பட்டிருந்தது. அதன் ஈரம் காயும் முன்னரே மஞ்சள் கிழங்கால் தீட்டப்பட வேண்டிய சித்திரத்தின் குறிப்பு வரிவடிவமாக வரையப்பட்டது. சுண்ணாம்பும், மஞ்சளும் சேர்ந்தவுடன் ஒருவிதச் சிவப்பு நிறத்தில் ஓவியத்தின் வரிவடிவம் தெரிந்தது. அந்த முறையிலே கந்தவர்களின் தோற்றங்கள் அந்தப் பாறையிலே தீட்டப்பட்டன. ஆனால், அவர்கள் கரங்கள் வறிதே காட்சியளித்தன. கந்தர்வர்களின் கரங்களிலே புதுவித இசைக் கருவியொன்றைக் கொடுக்க அவர்கள் யோசனை செய்தனர். பிட்சுகளும், ஓவியர்களும் முடிவு செய்ய இயலாத காரியத்தை அவன் செய்தான். கந்தர்வர்களின் கரங்களில் நரம்பினாலான இசைக் கருவியொன்றைத் தனது வெகுநாளைய கற்பனையின் வடிவாகத் தீட்டி முழுமையாக்கினான்.

## 3

வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. விந்திய மலையின் மீது கரிய மேகங்கள் கொஞ்சங் கொஞ்சமாக வந்து படியத் தொடங்கின. காற்று 'விர் விர்' என்று வீசத் தொடங்கியது. வழக்கமாக வெகுதூரம் சென்று சுற்றிவரும்

பறவைகள் வெகுவிரைவில் தங்கள் கூடுகளை வந்தடையலா யின. மந்தியும் கடுவனும் மழைக்காலத்தில் தங்கத் தக்க இடம் தேடி அங்கும் இங்கும் விரைந்தன. காட்டாற்றில் சுழிப்புடன் தண்ணீர் பெருகத் தொடங்கிற்று. காற்று வீசும்போது அதிலே குளுமை கலந்திருந்தது.

காட்டாற்றின் கரையோரமாகச் சென்று அது கீழே வெகு வேகமாக விழும் அருவிக் கரையருகே அமர்ந்து, கையிலுள்ள உலர்ந்த மரக்கட்டையை உடைவாளால் சீவி, அதற்கு ஒருவித உருவ அமைப்புக் கொடுத்த வண்ணமிருந்தான் குணபரன். வாயைப் பிளந்து நிற்கும் யாளியின் உரு இப்போது மரக்கட்டையின் முகப்பில் ஏற்பட்டுவிட்டது. இடையைச் சுற்றிக் கட்டியிருந்த நரம்புகளை அவிழ்த்தெடுத்தான். அதை அந்த மரக்கட்டையில் வரிசையாகக் கட்டினான். அவன் நீண்ட நாள்களாக எதிர்பார்த்திருந்தபடி அந்த இசைக்கருவிக்கு ஓர் உருக்கொடுத்து விட்டான். இனி அதனுடன் இணைய வேண்டியதுதான். அவன் விரல்கள் நரம்புகளைத் தடவின. அவன் உதடுகள் ஏழிசையை எழுப்பின.

அவன் எதிர்பார்த்த ஒலியா அது? அன்று - 'டொக்... டொக்...'

இறுக்கியிருந்த நரம்பின் பிடியைச் சற்று தளர்த்தினான். இப்போது -

'ட்ரிக் ட்ரிக் ட்ரிக்'.

அவன் மடியிலே அந்த இசைக்கருவி துவண்டு கிடந்தது. சில்லென்று காற்று வீசியது. மரக்கிளையினின்று சிறு நீர்த்துளிகள் உதிர்ந்தன. 'களுக்'கென்ற சிரிப்பின் ஒலியும் அங்கே கேட்டது. அவன் திரும்பிப் பார்த்தான்.

அவள் நின்று கொண்டிருந்தாள்!

''என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? அங்கே கந்தர்வர் கையில் கொடுத்த வீணையை இங்கே எடுத்து வந்து



35642 53/0275

விட்டீர்களா?'' - அவள் குரல் அவன் மீட்டியிருந்த இசையின் ஓசையை நிகர்த்திருந்தது.

'வீணை வீணை' - அவன் உதடுகள் முணுமுணுத்தன.

''வீணையை அறிவாயா? நீ வீணையைப் பார்த்திருக் கிறாயா?'' என்று குணபரன் சட்டென்று கேள்வியை வீசினான்.

''நான் பார்த்ததில்லை. கேள்விப்பட்டிருக்கிறேன். இராவணேசுவரன் வீணையை மீட்டுவதில் வல்லவன் என்று என் தந்தை கூறியிருக்கிறார். அது எப்படியிருக்கும் என்று என்னால் கற்பனை செய்து கொள்ளக் கூட முடியவில்லை. கந்தர்வர் கையில் புதுவிதக் கருவி ஒன்றை வைத்திருப்பது போல் தீட்டியிருந்தீர்கள்.''

குணபரன் ஒரு கணம் திகைத்தான். அவள் இப்பொழுது கொச்சைப் பிராகிருதத்தில் பேசாமல் தமிழில் பேசினாள். ஆகா; அதற்குத்தான் என்ன இனிமை! இனிமையான அந்த மொழியைக் கனி இதழினின்று கேட்கும்போது -

''என்ன திகைக்கிறீர்கள்? என் தந்தையே நீங்கள் வரைந் திருந்த இசைக் கருவியைக் கண்டு வியந்தார். கந்தர்வர்கள் கையில் வைத்திருந்த அந்த நரம்புக்கருவி இல்லை என்று என் தந்தை கூறினார் என்றாலும் உங்கள் கற்பனையின் திறமை கண்டு வியந்தார். திறமை உங்களிடம் மறைந்திருப்பதைக் கண்டு அவருக்கு உங்கள் மீது அளவற்ற மதிப்பு ஏற்பட்டுவிட்டது.''

குணபரன் அவளையே வைத்த விழி வாங்காது பார்த்த வண்ணமிருந்தான்.

''என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்? உங்கள் இசைக்கருவி பேசாததால் உங்கள் சொல்லும் அடைத்து விட்டதோ?''

குணபரன் அப்போதுதான் குழந்தை போல் மடிமீது துவண்டு கிடந்த அந்த நரம்புக் கருவியை மீண்டும் எடுத்து மீட்டினான்.

'டொக் டொக் டொக்...'

அதைத்தவிர வேறுவித ஒலியில்லை. இவ்வளவு நாள் பிரயாசைப்பட்டுக் கண்ட அந்தக் கருவி எழுப்பும் ஒலி இதுவோ?

'கணீர்' என்ற சிரிப்பு மீண்டும் எழுந்தது அவனிடமிருந்து.

அவள் அங்குமிங்கும் பரபரப்புடன் ஓடினாள். சுள்ளிகளைப் பொறுக்கி எடுத்து வந்தாள். சருகுகளைச் சேர்த்தாள்; இரண்டு கற்களைத் தட்டினாள்; தீப்பொறி எழுந்தது. குப்பென்று தீ அந்தக் காய்ந்த குவியலில் பற்றிக் கொண்டது. அந்த இலேசான குளிர் வேளையில் சிறிது உஷ்ணம் தேவையாய்த்தான் இருந்தது.

குணபரன் கணப்பின் அருகே வந்தமர்ந்தான்.

''உனக்குத் தமிழ் தெரியுமா?'' - அவன் பேச்சைத் தொடங்கினான்.

''உங்களுக்குத் தெரியுமா?''

அவனால் மறுமொழி கூற முடியவில்லை. அவன் நெஞ்சிலிருந்த அந்தச் சொல் உதட்டை வந்தடைந்து விட்டது. ஒரே கணம்தான் அதை உதிர்த்துவிட முனைந்தது. 'நான் தமிழ்நாட்டைச் சேர்ந்தவன்' என்று கூறிவிட அவனால் முடியும். அதன் விளைவு விபரீதமாக இருக்கும். பேச்சை மாற்ற எண்ணினான்.

''எனக்கு எல்லா மொழிகளும் தெரியும்!''

''மொழி மட்டுமா தெரியும் உங்களுக்கு? எல்லாவிதக் கலைகளும் தெரியும் போலும்!''

அவன் புன்னகை புரிந்தான்.

''ஆனால் நரம்புக் கருவியை மீட்ட இந்த வேளை அவ்வளவு வாய்ப்பாயிராது என்பது மட்டும் தெரியாது...! மப்பும்



மந்தாரமுமாயிருக்கும் வேளையிலே நரம்பிலே நன்றாக முறுக்கேறாதே...!'' என்று கூறியவாறு அவள் அவனிடமிருந்து அந்த இசைக்கருவியைப் பெற்றாள். அதை மீட்டினாள். இப்பொழுது -

அற்புதமான ஒலி; கானப் பறவையின் கலகலவெனும் ஓசையையும் அது மிஞ்சியது. பாடிவரும் அருவியின் நாதத்தையும் அது வென்றது. மதுவருந்த மலரை வட்டமிடும் வண்டினத்தின் ரீங்காரத்தையும் அது -

''ஆகா; உன் கரங்களில் மந்திர சக்தி இருக்கிறதா? அல்லது வான வீதியிலே செல்லும் கந்தர்வ மகளோ நீ? கின்னர, கிம்புருடர்கள் உன்னிடம் தங்கள் இசைக்கருவியை அளித்துச் சென்று விட்டனரா? பெண்ணே! என்ன அற்புதம் செய்துவிட்டாய்! இவ்வளவு நாள்களாக நான் முயன்றும் முடியாத ஒரு செயலைச் செய்து விட்டாயே. இந்தக் கானகம் சுவர்க்கமாகி விட்டதே. நான் தேவேந்திரனாகி விட்டேனே...! பெண்ணே, பாடு! பாடு. நீ அறிந்த பாடலைப் பாடு...'' - குணபரன் உணர்ச்சியின் உச்ச நிலையில் நின்று பேசிய வண்ணமிருந்தான்.

''நான் தேவமகளும் அல்லள்; மந்திரமும் அறியேன். தீயின் சூடுபட்டு நரம்புகள் முறுக்கேறின. நீங்கள் படைத்த இந்த வீணை தன் குரலை எழுப்பியது. எனக்கு இதை மீட்டத் தெரியாது. நீங்களே ஏழிசையை எழுப்புங்கள். ஆனால் நான் - நான், என் தாய் கற்றுக் கொடுத்த பண்ணைப் பாடுவேன். உங்களால் அதற்கொப்ப நரம்பிலே மீட்ட முடியுமா?''

''பண்ணா? - அப்படியென்றால்?''

''ஓகோ? உங்களுக்குத் தெரியாது. தெற்கே தமிழ்நாடென்று ஓர் அற்புத நாடிருக்கிறது. நான் பிறந்த பொன்னாடு. எங்கள் தமிழகத்தில் கலை மிக உன்னத நிலையில் இருந்திருக்கிறது. இசை மகோன்னத நிலையிலிருந்தது. பண்கள் பல உண்டு. என் தாய் அவற்றை விளக்கும் இசை நூல்கள் பல உண்டு. என் தாய்

கூறியிருக்கிறான். பல நூறு வருடங்களுக்கு முன்பு மாதவியெனும் ஆடலரசியும், கோவலன் எனும் வணிகப் பெருமகனும் இசைக்கலையில் வல்லுநர்களாய் இருந்தார்கள் என அறிந்திருக்கிறேன். அவர்கள் யாழ் எனும் நரம்புக் கருவியில் இசை மீட்ட அறிந்திருந்தார்கள். அந்த யாழ அவர்களைப் பிரித்தது - பெரும் சோகக் கதை ஓவியரே! அது பெரும் சோகக்கதை. சீவகன் எனும் அரசகுமாரன் காநதர்வதத்தை எனும் அரசகுமாரியை யாழிசையில் வென்று வாகை சூடிய கதையை எல்லாம் என் தாய் கூறுவார்கள்...''

''பெண்ணே! நீ என்ன மூன்றுலகங்களையும் உணர்ந்தவளா? என்னைக் கூறினாயே. நீயும் சகல கலைகளையும் அறிந்திருக்கிறாயே. உங்கள் நாட்டில் கலை மகோன்னதமாக இருந்ததென்பதை நானறியேன். எனக்கு எல்லாம் விவரமாகக் கூறு. நீ தமிழகத்தைச் சேர்ந்தவளா? சங்கீத சாஸ்திரத்தை நீ அறிவாயா? சொல்லு, பெண்ணே! சொல்லு. அதற்கு முன்பாக, உன் பெயர் என்ன என்பதை நான் அறிந்து கொள்ளலாமா?'' குணபரனின் ஆவல் தளும்பி நின்றது.

அவள் நகைத்தாள். அவள் எதும் பேசவில்லை. அவள் அப்போது நின்ற தோற்றம் குணபரனை மெய்மறக்கச் செய்தது. அவனை அறியாமல் அவன் கைகள் நரம்புகளை மீட்டின.

அவளது இடை வளைந்து அசைநதது; மூங்கில் போன்ற இளங்கரங்கள் பல பாவங்களை எழுப்பும் நிலையில் நெளிந்தன. கிண்கிணி அணிந்திருந்த மெல்லிய சீரடிகள் தாளமிட, ஓர் அற்புத நடனம் உருவாயிற்று. இந்திரகோபப் பூச்சியினது நிறங்கொண்ட ஆடை அணிந்திருந்தாள் அவள். எரியும் தீயின் செந்தீ நாக்குகள் உமிழ்ந்த வர்ணம் அந்த ஆடையின் நிறத்தை இன்னும் அதிகப்படுத்தியது. அழகிற் சிறந்த முருங்கைப் பூக்களை அவள் சூடியிருந்தாள். அவள் ஆடும்போது கோங்கின் குவிந்த அரும்பு போன்ற இளமை கெழுமிய தனங்கள் அதற்கேற்ப அசையும்போது பரமரசிகனான குணபரனின் இசைவெறி அதிகமாயிற்று... பாட்டும் பரதமும்



காலத்தை விழுங்கின. சுற்றுச் சூழ்நிலையை உண்டு களிப்பெய்தின.

அந்த அருவிக்கரை பெரும் பாக்கியம் செயதிருந்தது. நாள்தோறும் மங்கையின் நடனமும் குணபரனின் இசையும் கேட்டு மரங்களும் செடிகளும் கொடிகளும் மெய்மறந்தன.

''இன்று நான் நரம்பினை மீட்டப் போவதில்லை.''

''ஏனாம்?''

''உன் பெயர் தெரியாது நான் எவ்வளவு நாளிருப்பது? உன்னைப் பெண்ணே பெண்ணே என்று எவ்வளவு நாள்களுக்கு அழைப்பது? உன் பெயரைக் கூற மாட்டாயா?''

''என் பெயரில் அப்படியொன்றும் இனிமை இராது. நான்தான் உங்களருகே இருந்து பாடுகிறேனே, அது போதாதா?''

''போதாது; உன் பெயர் எனக்குத் தெரிய வேண்டும். என் ஊருக்குத் திரும்பிய பிறகுநான் அந்தப் பெயரை என்றுமே உச்சரித்த வண்ணமிருப்பேன்.''

''உங்கள் ஊருக்குத் திரும்புகிறீர்களா? நீங்கள் மட்டும் தானா?''

அவன் களங்கமில்லாத முகத்துடன் அவளை நோக்கினான்.

''ஆம்; எனக்கு ஏனோ இந்தக் காட்டு வாழ்க்கை புளித்து வருகிறது. நான் என்ன காரணத்திற்காக இங்கு வந்தேனோ அது நிறைவேறாது போலிருக்கிறது.''

''என்ன காரணத்திற்காக வந்தீர்கள் என்று சொல்ல மாட்டீர்களா?''

''நீ உன் பெயரை கூறு... நானும் சொல்கிறேன்.''

''பெயர் அப்படி பரம ரகசியமா என்ன? பெயருக்கேற்ப நான்தான் உங்கள் அருகிலிருக்கிறேனே.''

''புதிர் போடுகிறாயே.''

''என் பெயர் பரிவாதினி.''

குணபரனின் உடலில் இன்ப ரேகைகள் பொங்கி இரத்த நாளங்கள் வழியே பாய்ந்தன.

''பரிவாதினி, பரிவாதினி, பரிவாதினி'' என்று குணபரன் பலமுறை கூறினான்.

''பரிவாதினி! - உடன் இருந்து வாசிப்பவள் - ஆகா; என்ன பொருத்தமான பெயர்! உன் பெயரே இதுதானா? கற்பனைப் பெயரா?'' குணபரன் மனத்தில் பலவித எண்ணங்கள் எழுந்தன. ஒருகணம் கண்ணை மூடிக்கொண்டு இன்ப அனுபவத்தை மனத்தில் இறுத்த முனைந்தான். தான் போகும்போது அவளையும் ஏன் அழைத்துச் சென்றுவிடக் கூடாது? அவளைப் போன்ற உற்ற தோழர் எங்குக் கிடைப்பர்? தன் இலட்சியத்துக்கேற்ற துணை. தன் எண்ணத்தை உணர்ந்து நடக்கும் அவளது துணை தனக்கிருந்தால் இந்த உலகத்தில் எல்லாவற்றையும் பெற்றுவிடலாம். இசை - சிற்பம் - சித்திரம் - நல்லாட்சி; ஆகா; இன்னும் என்னென்ன அற்புதமுண்டோ அவற்றையெல்லாம் நிறைவேற்றுவேன்... அவள்... அவள்...

எத்தனை நேரம் அவ்வாறிருந்தானோ...?

'பரிவாதினி' என்று அவன் கண்களைத் திறந்து அழைத்தான். அவளைக் காணவில்லை. நெருப்பும் அணைந்து கருகிவிட்டிருந்தது. பரபரப்புடன் எழுந்த குணபரன், ''பரிவாதினி! பரிவாதினி'' என்று கூவினான்.

காட்டிலும், மலையிலும் பரிவாதினி பரிவாதினி என்ற குரல் எதிரொலித்தது.



## 4

பரிவாதினியைச் சந்திக்க முடியாமலே நாள்கள் ஓடிக் கொண்டிருந்தன. குணபரன் அருவிக்கரைப் பாறையிலமர்ந்து நரம்பினைத் திருத்தி மீட்டிக் கொண்டிருந்தான். அதிலிருந்து பிறக்கும் நாதங்களிலே அவன் மனம் செல்லவில்லை. அவன் விரல்கள் அவனை அறியாது புதுப்புது விதமான இன்பநாதம் எழ வழி செய்தன. ஆனாலும் அவன் எண்ணமெங்கோ சுற்றிச் சுழன்றது. கடைசியாக அதிலிருந்து ஏனோ சோக நாதம்தான் எழுந்தது. அவன் அதற்கு மேல் அங்கிருக்க விரும்பவில்லை. அவளைக் காண முடியாததன் காரணம் அவனுக்கு விளங்க வில்லை. குகையிலே தீட்டப்படும் சித்திரங்களை அவன் ரசிக்கவில்லை. கண்ணெதிரே பூத்துக் குலுங்கும் புதுமலர் களைக் கண்டு அவன் சிரிக்கவில்லை. கீழே தூவப்பட்டுக் கிடக்கும் சிறு இதழ் கொண்ட மலர்கள் அவன் கால்பட்டு நசுங்கின.

பாறையிலிருந்து அவன் எழுந்தபோது எதிரே பரிவாதினி நின்று கொண்டிருந்தாள். எப்போதும் களிப்பிலே துள்ளும் அவள் முகத்தில் வேதனை குடிகொண்டிருந்தது. ''பரிவாதினி! - நீயேதானா?'' அவன் குரலில் ஆர்வம் பொங்கியது. பரிவாதினியைக் கண்டுவிட்ட ஆனந்தத்தில், ''பரிவாதினி! இன்று ஏனோ நரம்புகள் சோக இசையை மீட்டுகின்றன. ஆனால் உன்னைக் கண்டுபிட்ட களிப்பில் சோக கீதத்தை மலைக்கும் மரத்திற்குமே விட்டுவிட்டேன்'' என்றான்.

பரிவாதினி மறுமொழி ஏதும் கூறவில்லை.

''சோக இசை - அதன் ஆரம்ப கீதம் தொடங்கிவிட்டது, கலைஞரே'' என அவன் கூறுவதற்குள் அவள் குரலில் துக்கம் பொங்கியது.

"கலைஞரே! சொல்லுங்கள்; சொல்லுங்கள். இதுவரை என்னை நீங்கள் ஏமாற்றித்தானே வந்தீர்கள்?" பரிவாதினியின் கண்கள் கலங்கியிருந்தன.

குணபரன் திடுக்கிட்டான். திடீரெனப் பரிவாதினி இவ்வாறு கேட்டது அவனுக்கு அதிர்ச்சியை அளித்தது.

"நீங்கள் ஆயிரம் சமாதானம் கூறலாம். ஆனால் இப்படி ஓர் ஏழைப் பெண்ணை ஏமாற்றியிருக்கக் கூடாது."

"பரிவாதினி! நீ என்ன கூறுகிறாய்? நான் உன்னை ஏமாற்றினேனா? அதனால்தான் நீ இவ்வளவு நாள் இந்தப் பக்கம் வராமலிருந்தாயோ? உன்னை ஏமாற்றும் நோக்கமே எனக்கில்லையே. உன்னிடம் சொல்லாமல் ஊருக்குப் புறப்பட எண்ணினேன். அதை நீ எப்படி அறிந்தாய்? இதயத்து நினைவையெல்லாம் உணர்பவளா நீ? கோபிக்காதே பரிவாதினி!" குணபரன் குழைந்தான்.

"இந்தப் பேதைப் பெண் எதையும் நம்பிவிடுவாள். காட்டையும் மலையையும் தந்தை படைக்கும் சித்திரங்களையும், அவர் அன்பையும் தவிர உலகத்தின் காற்றே படாது வளர்ந்துவிட்ட எனக்கு எல்லாமே உண்மையாகப் படுகிறது. நான் மட்டுமென்ன? எங்கள் நாட்டிலுள்ள சாதாரண மலர்கூட நம்பிக்கையால் எரிந்துவிடக் கூடியவை. சோலைகளிலுள்ள புன்னை மரங்களில் பூக்கள் மலர்ந்து நிறைந்திருக்கின்றன. அன்னப் பறவை புன்னை மரமொன்றில் ஏறி அமர்கிறது. அது முழு நிலவைப் போல் காட்சியளிக்கிறது. புன்னை மலர்கள் வானத்து மீன்கள் போலத் தோன்றுகின்றன. இந்தக் காட்சியைக் கண்டு உண்மையிலேயே வானத்தில் நிலா தோன்றிவிட்டதென்று ஆம்பல் மலர்ந்துவிட்டது. அந்த மலரைப் போன்று அறியாமை நிறைந்தவள் நான். படரும் பசுங்கொடியில் நச்சு மூலிகையும் உண்டு. உயிர் கொடுக்கும் சஞ்சீவியும் உண்டு. எனக்கு இரண்டும் பசுமையாகவே படுகின்றன. கீழைச்



சாளுக்கிய நாட்டில் கிருஷ்ணையாற்றங்கரையில் சிறு கிராமத்தில் வாழும் கலைஞன் என்றே உங்களை நம்பியிருந்தேன். ஆனால், நீங்கள்..."

குணபரனின் உடல் சிலிர்த்தது. வளர்ந்திருந்த இளந் தாடியை ஒருமுறை தடவி விட்டுக் கொண்டான். அவள் இன்னும் என்ன கூறுவாளோ என்ற துடிதுடிப்பு -

"தமிழகத்தின் கண் போன்ற இரு வேந்தர்களான சோழர்களையும், பாண்டியர்களையும் அழித்துத் தன் கொடுமையான ஆட்சியை நிறுவிய களப்பிரர்களை விரட்டியடித்த சிம்மவிஷ்ணு அரசர் காஞ்சியிலமர்ந்து சிங்கக் கொடியைக் காஞ்சியின் எயிலில் பறக்க விட்டிருக்கிறார்."

"உம்; அதனால்?"

"அவருக்கு ஒரே மகன். இளம் வயதிலேயே கலையார்வம் கொண்டு அலையும் மகனின் ஆசையை அடக்காமல் காட்டிலும் மலையிலும் அவரை அலைய விட்டார்."

"ஓகோ! அதற்கும் இதற்கும் என்ன தொடர்பு?"

"போர்க்குணம் மட்டும் அரசரது தொழிலன்று; நாட்டு மக்களின் வாழ்வும், பண்பும் உயர்ந்து, அவர்கள் சந்ததி சிறப்புடன் வாழ அந்த அரசகுமாரன் கனவு கண்டான். தன் தந்தை கிருஷ்ணையாற்றங்கரையில் கல்லைக் குடைவதை இளம் வயதில் கண்டிருக்கிறான். அருக தேவனின் அருளுக்குப் பாத்திரமான அந்த அரசகுமாரனுக்கு எப்படியோ விந்தியமலைக் காடுகளில் அற்புதக் கலைச் செல்வமிருப்பது தெரிந்தது. அந்தப் பகுதியோ பரம்பரைப் பகைவர்களின் நாடு. சிம்மவிஷ்ணுவின் வளர்ச்சியில் வேதனையுற்ற சாளுக்கிய மன்னர் செங்கோலோச்சும் பகுதி அது. அரசகுமாரன் என்ன செய்ய இயலும்? சமாதானமான முறையில் மலைப்பகுதிக்கு வருவதென்றால் தந்தை சிம்மவிஷ்ணு ஒப்பமாட்டார். பௌத்த பிட்சுகளைத் தவிர வேறு யாரும் காணமுடியாத அந்த இடத்திற்கு எப்படியாவது வர அரசகுமாரன் ஆசைப்பட்டான். மலைக்

குகையிலே அற்புத ஓவியங்கள் இருப்பதையும், இன்னும் புதுப்புது ஓவியங்கள் தீட்டப்பட இருப்பதையும் கேள்விப் பட்டான். ஓவிய அற்புதத்தைவிட அந்த ஓவியங்களில் தீட்டப்பட்டிருக்கும் அழியாத வர்ணங்கள் அவன் ஆசையை இன்னும் இன்னும் தூண்டின."

குணபரன் சற்றே பெருமூச்சு விட்டான்; அவன் கண்கள் கலங்கின.

"அந்த அரசிளங்குமாரன் இளம் ஓவியனைப் போன்று நடித்தான். சித்திரங்களை வரைவதில் உதவ முதியவரான ஓவியரின் பேரன்பைப் பெற்றான். அவருடன் தொடர்ந்து குகைப் பகுதிக்கு வந்தான்."

குணபரனின் இதயத்தில் புதுவித உணர்ச்சி. "அவனை முதலில் கண்டபோதே சாதாரண மனிதனல்லன் இவன் என அந்தப் பேதை புரிந்து கொண்டாள். அவனுள்ளே பெருஞ்சக்தி புதைந்து கிடப்பதாக எண்ணினாள். ஆனால் அவனோ, அந்த அபலைப் பெண்ணிடம், தான் ஒரு சாதாரண மனிதன் எனக் கூறிக் கொண்டான். கிருஷ்ணா நதிக்கரையிலுள்ள சிறு கிராமத்தைச் சேர்ந்தவனென்று தன்னைக் கூறிக் கொண்டான்"-

அவள் இப்போது விம்மினாள்.

குணபரன் நடுங்கும் கரங்களுடன் அவள் கண்ணீரைத் துடைத்தான். பரிவாதினி குனிந்து அவன் பாதங்களைப் பிடித்துக் கொண்டு, "இளவரசே! என்னைப் பொறுத்தருளுங்கள். உங்களை இன்னார் என அறியாமல் நான் சரிசமமாகப் பழகிவிட்டேன்" என்று விம்மினாள்.

குணபரன் பதைபதைத்து, "இது என்ன? என்ன காரியம் செய்கிறாய்? எழுந்திரு. நான் இளவரசன் என்று யார் சொன்னது?" என்று மெல்ல அவளை எடுத்து நிறுத்தினான். அவள் தன் கையிலிருந்த ஓலைச்சுருளை அவனிடம் நீட்டினாள்.



## 5

தமிழகத்தைப் பெருமையுடன் ஆண்ட சங்ககால மன்னர்க்குப் பிறகு தமிழகத்திலே இருண்ட உணர்ச்சி நிலவியது. களப்பிரர்கள் இந்தச் சமயத்தைப் பயன்படுத்திச் சோழ, பாண்டியர்களை அடக்கித் தங்கள் கொடியைப் பரவவிட்டனர். அப்போது தோன்றினர் பல்லவர்கள். ஆந்திர நாட்டினின்று வந்தனர். தொண்டை மண்டலத்தில் தங்கள் கொடியை நாட்டினர். நாக நாடான பழம்பெரும் அந்த நாட்டை வளப்படுத்த முயன்றனர். ஆயிரமாயிரம் ஆண்டுகளாகப் புகழ் பெற்றிருந்த காஞ்சியைத் தலைநகராகக் கொண்டனர். அம்மரபில் வந்த சிம்ம விஷ்ணு களப்பிரர்களை விரட்டப் பெரும் படை திரட்டினான். அவர்களை அறவே ஒழித்தான். அந்த மாபெரும் மன்னனான சிம்ம விஷ்ணுவின் திருக்குமாரன் தான் மகேந்திரவர்மன். தந்தை காஞ்சியில் அரியணையில் அமர்ந்து அரசு நடத்துகையில் மகேந்திரன் தன் தாய் மாமன் வீடான கிருஷ்ணை நதிக்கரையிலிருந்தான். அப்போதுதான் அந்த இளவரசனின் உள்ளத்தில் கலையார்வம் பொங்கியது. நாகார்ச்சுன மலையையும், அஜந்தாக் குகைகளையும் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருந்தான். பாறைகள் எங்கு வழிந்தே நின்றாலும் அவன் நெஞ்சிலே கற்பனை உருவெடுத்துக் கூத்திடும். கத்தியும், வாளும், வில்லும், எறிவேலும் [illegible] போரும் மட்டுமே ஒரு ராஜ்யத்தின் அணிகலன்களல்ல என்பது அவன் உள்ளத்தே பதிந்தது. மகேந்திரன் சகல கலைகளையும் அறிய அறிஞர் இருக்குமிடமெல்லாம் சென்றான். கடிகைகளிலும், ஆசிரமங்களிலும் சிஷ்யர்களோடு சிஷ்யர்களாகக் கலந்து எல்லாக் கலைகளையும் கற்றான். தன் தாய்மாமனது நாடான கிருஷ்ணை நதிக்கரைபோக்கில் அவன் தன் இளம்பருவத்தைக் கழித்தபோதுதான் சிற்பங்களையும்,

சித்திரங்களையும், நாரதமுனி படைத்த இசைக் கலையையும் கற்று உணர்ந்தான். அந்தச் சமயத்தே அற்புத ஓவியங்கள் நிறைந்த பௌத்தர்களின் குகைகளைப் பற்றிக் கேள்விப்படவே, அங்கே செல்ல முடிவு செய்தான். பல்லவர்களோடு பரம்பரைப் பகைமை பாராட்டிய சாளுக்கிய மன்னன், பல்லவ இளவரசன் தன் நாட்டிற்கு வந்திருக்கிறானென்பதை அறிந்தால் தன் எண்ணம் பலிக்காது என்பது அவனுக்குப் புரிந்திருந்தது. அந்தச் சமயம் அஜந்தாக் குகைகளில் முன்பு விட்ட இடங்களிலிருந்து சித்திரத்தைத் தொடர்ந்து தீட்ட சாளுக்கிய மன்னன் திட்டமிட்டான். எனவே அந்தக் குகைகளிலே அமைதியாக சங்கம் அமைத்து வாழ்ந்து வந்த பௌத்த பிட்சுகளின் உதவியுடன் மீண்டும் சித்திரக் கலைக்கு உயிரளித்தான். நாட்டில் அங்கும் இங்கும் பரவிக் கிடந்த சித்திரக்காரர்களைத் திரட்டினான். மகேந்திரன் இதை அறிந்தான். அச்சமயம்தான், முதிய ஓவியர் பெரும்பணியை மேற்கொண்டு விந்தியமலைக் காடுகளுக்குச் செல்கிறார் என்பதை அறிந்தான். அவருடன் நட்பு பூண்டான். அவருக்கு நம்பிக்கை வாய்ந்ததொரு சிஷ்யனாகத் தொண்டாற்றினான்.

எவரும் அவனைச் சந்தேகிக்கவில்லை. முதியவருக்கு உதவுவது போன்று குகையின் பழைய ஓவியங்களைக் கண்டான். சித்திரம் தீட்டும் முறையறிந்தான். அவற்றில் தீட்டப்படும் வண்ணங்களின் கலவை முறையை மட்டும் அவனால் அறிய முடியவில்லை. மற்ற குகைகளில் அறுநூறு எழுநூறு ஆண்டுகளாகத் தீட்டப்பட்டிருக்கும் ஓவியத்தில் உள்ள வண்ணங்கள் இன்னும் அழியாதிருப்பதைக் காணும்போது அவன் துடிப்பு அதிகமாகும்.

தலைமைப் பிட்சு ஒரு கணம் குணபரனை நோக்கினார். அவருடைய கூர்மையான கண்கள் ஊடுருவி அவன் உள்ளத்தை அறிய முயன்றன. இந்த இளைஞனுக்கு இருக்கும் கற்பனை அபாரம்தான் என்று முணுமுணுத்தார். அன்றிரவு பிரார்த்தனைக்குப் பிறகு அவர் மற்ற பிட்சுகளைக் கூட்டினார்.



முதிய ஓவியருக்கு உதவியாக வந்திருக்கும் இளைஞனைப் பற்றிய தன் கருத்தைத் தெரிவித்தார்.

"அந்தப் பிள்ளை சாதாரண ஓவியனாக இருப்பான் என்று எனக்குத் தோன்றவில்லை. அவனுடைய தோற்றம் கம்பீரமாக இருக்கிறது. அவனுடைய பார்வையில் நேற்று, இன்று, நாளையை அறியும் சக்தி இருக்கும் போல் தோன்றுகிறது. நீங்கள் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கானகத்திற்குள் செல்லும்போது மிக கவனமாகச் செல்லுங்கள். வர்ணக் கற்களை வெட்டி எடுக்கும்போதும், அவற்றைத் தூளாக்கிக் குழம்புடன் பச்சிலைச் சாற்றைக் கலக்கும் போதும் மிகக் கவனமாக இருப்பது நல்லது" என்று கூறினார்.

இதுகாறுமில்லாத சந்தேகம் பெரியவருக்கு ஏற்பட்டிருப்பதை அறிய மற்றவர்களுக்கு வியப்பும் அச்சமும் ஏற்படாமலில்லை. மன்னர் புலகேசினுக்குச் சந்தேகம் பிறந்தால் இந்த மலைக் குகைகளையே தவிடுபொடி செய்து விடுவார் என்று அஞ்சினார்.

தலைமைப் பிட்சுவின் சந்தேகத் தீயில் நெய் இடப்பட்டது போல் புலகேசினிடமிருந்து ஓலையொன்று வந்திருந்தது. சைத்யங்களிலும், விஹாரங்களிலும் வரையப்படும் ஓவியத்தில் தீட்டப்படும் அழியா வர்ணக் கலவை முறையைப் பரம ரகசியமாகச் சாளுக்கிய நாட்டினர் காத்து வந்தனர். மகேந்திரவர்மன் மாறு வேடத்துடன் வர்ணச் சேர்க்கை முறையை அறிய வந்திருக்கிறான் என்பது அப்போது அரியணை ஏறியிருந்த இரண்டாம் புலகேசினுக்கு எட்டியது. உண்மைதானா என அறியப் பௌத்த விஹாரத்துத் தலைமைப் பிட்சுவுக்கு ஓலை அனுப்பினான். அந்த ஓலையில் கண்டுள்ளவை உண்மைதானா என அறிய அன்று சங்கம் கூட்ட பிட்சு முடிவு செய்திருந்தார். அந்த ஓலையை முதிய ஓவியரிடம் அவர் கொடுத்து ஆராயச் சொன்னார். பரிவாதினிக்கு முன்பே குணபரனின் மீது சந்தேகமுண்டு. கம்பீரமான தோற்றத்தையும் அழகொளி வீசும்

முகத்தையும் அவனால் எப்படி மறைக்க முடியும்? குணபரன் இன்னும் அங்கிருந்தால் நிச்சயம் சாளுக்கிய வீரர்களால் சிறை பிடிக்கப்பட்டு கொடுந் தண்டனைக்கு உள்ளாகி விடுவான் என்பதை பரிவாதினி நொடியில் அறிந்தாள். குணபரனை எச்சரிக்க ஓடோடி வந்தாள். வந்தவுடனே ஓலை விஷயத்தைக் கூறாமல் சிறிது சிறிதாகத் தன் உள்ளத்தில் அடக்கி வைத்திருந்த உணர்ச்சியை வெளியிட்டாள். இனியும் சில நாழிகைக்கூடத் தாமதம் செய்யாமல் அந்தக் காட்டுப் பகுதியை விட்டு உடனே போய்விடுமாறு கூறினாள்.

இதுகாறும் குணபரன் என்று பெயர் பூண்டிருந்த மகேந்திர வர்மன் சிறிது நேரம் மௌனமாக நின்றான். அவன் வந்த வேலை ஈடேறவில்லை. பாறைகளினின்றும் பூமியினின்றும் எடுக்கப்படும் இயற்கை மூலப் பொருள்களைப் பக்குவப்படுத்தி ஓவியத்திற்கேற்ப வர்ணக் கலவைகளைத் தயாரிக்கும் முறையை அவனால் அறிய முடியவில்லை. தினமும் இரவு நடுசாமத்திற்கு மேல் இரண்டு பிட்சுகள் கையில் தீவட்டியுடன் காட்டாற்றைக் கடந்து கானகத்தின் நடுவே வெட்ட வெளியாயிருந்த பகுதியை அடைவார்கள். அங்கே இயற்கையாய் அமைந்திருந்த பாறைக் குகையில் பெரும் மட்பாண்டங்களும், துகள் செய்யக் கருவிகளும் வண்ணக் குழம்பைச் சேகரிக்க மட்பாண்டங்களும் ஏராளமாய் இருந்தன. பிட்சுகள் ஏதோ மந்திரத்தை உச்சரித்த வண்ணமிருப்பர். வெகு வேகமாகப் பச்சிலைகளைக் கொணர்வதும், பிழிவதுமாக வேலை நடக்கும். அச்சமயத்தே எங்கோயிருந்து வேங்கையின் கர்ஜனையும், அந்தக் குரலுக்கு அஞ்சிக் கதறும் மற்ற விலங்குகளின் ஓலமும், இடையே உறக்கம் கலைபட்டதால் 'சடபுட'வென ஒலியுடன் பறந்து சென்று மீண்டும் இருப்பிடமடையும் புள்ளினக் கூட்டமுமாக அஞ்சா உள்ளம் படைத்த மகேந்திரன் உள்ளத்தையும் ஒரு கணம் கலங்க வைக்கும். ஆனால் வண்ணக் கலவை விதமறிய மட்டும் அவனால் இயலவில்லை. என்றாலும், பாறையிலேயே குடையப்பட்ட



மண்டபங்களின் அமைப்பு விதமறிந்தான்; அழகிய தூண்களையும் இறையகங்களையும் பக்கப் பாறைகளில் புடைச் சிற்பங்களைப் படைப்பதையும் அறிந்தான். பாறைச் சுவர்களைச் சமன் செய்து ஓவியந் தீட்டும் முறை அறிந்தான். தக்க ஓவியர் மட்டும் இருந்துவிட்டால் தமிழகத்தில் மற்றொரு கலைக்கூடத்தையே உருவாக்கி விடலாம் என்பதை அறிந்தான். எல்லாவற்றிற்கும் மேலாக ஏழு நரம்புகளைக் கொண்ட வீணையொன்றை உருவாக்கும் வாய்ப்பு அவனுக்குக் கிடைத்தது. பொன்னாலான கம்பிகள் மட்டுமில்லாமல் நரம்புகளைக் கொண்டும் வீணையினின்று ஸப்த ஸ்வரங்களை எழுப்பலாம் எனும் ஆராய்ச்சி முடிவுக்கு வர அந்த இடமல்லவா உதவிற்று!

''பரிவாதினி'' என்று மகேந்திரன் அழைத்தான். அவன் நெஞ்சம் பலவித உணர்ச்சிகளால் தழுதழுத்தது. ''உன்னை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணமே எனக்கில்லை. சுயரூபத்துடன் நான் இங்கு வந்திருக்க முடியுமா? சிறிது நாள்களாகவே என் உள்ளுணர்வு என்னை உறுத்தி வந்தது. இந்த இடத்தை விட்டுக் கிளம்பிவிட வேண்டும் எனத் தூண்டியது. பரிவாதினி! தக்க சமயத்தில் என்னை எச்சரித்தாய். அவ்வளவு எளிதில் புலிகேசினிடம் சிக்கிக் கொள்வதா? பரிவாதினி! நான் சென்று வருகிறேன். உன்னை ஒன்று வேண்டிக் கொள்கிறேன். நீயும் என்னுடன் வந்துவிடு...''

பரிவாதினி தன் சோகநிலையை மறந்து கலகலவென நகைத்தாள்.

''அரசே! இந்த அபலைக்கு அவ்வளவு பெரும் பேறு தகுமா? என் முதிய தந்தையை விட்டு நான் எப்படி வர முடியும்? என் கதையே விசித்திரமானது அரசே!'' என்றாள். மகேந்திரன் சிறிது நிமிர்ந்தான். இதுகாறும் அவளுடைய வரலாற்றை அவன் அறியவில்லை. ''பரிவாதினி, பரிவாதினி! இதுவரை என்னைப் பற்றியே பேசி வந்து விட்டேன். உன் கதை கேட்கவில்லை. சொல்லு, பெண்ணே! சொல்லு - அதை என்

இதயத்திலே எழுதி வைத்துக் கொள்கிறேன். அழகு மகளின் அற்புதக் கதையை எப்போதாவது முடிந்தால் காவியமாக எழுதுகிறேன். இந்த நாட்டில் நடப்பதை அப்படியே ஒரு நாடகமாக எழுத எண்ணியுள்ளேன். இப்போது நான் அறிவதெல்லாம் அதற்குப் பயன்படும்'' என்றான். பரிவாதினி கூறிய வரலாறு உருக்கமாக அமைந்தது.

## 6

தமிழகத்திலே சோழ சாம்ராஜ்யத்திற்கும், பாண்டியப் பெருநாட்டிற்கும் இடையிலே சோனாடு என ஒரு சிறு நாடிருந்தது. அந்த வளநாட்டின் தலைநகராகக் கொடும்பாளூர் திகழ்ந்தது. சோனாட்டை வேளிர்கள் எனும் குறுநில மன்னர் அரசுபுரிந்து வந்தனர். அஞ்சா நெஞ்சினர், வீரமரபினர். அந்த நகரில்தான் பரிவாதினியின் தாய் பெருந்தேவி உயர்தரக் கலைக் குடும்பம் ஒன்றில் பிறந்தாள். பரதமாமுனிவரின் நடன சாத்திரம் அறிந்தவர் அக்காலத்தே அரிதாயிருந்து வந்தனர். பாட்டும், பாதமும் பெருந்தேவிக்கு அவளுடைய பெற்றோர் கற்றுக் கொடுத்தனர். பெருந்தேவியின் தாய், தன் மகளுக்கு லதாவிகிசிக நடனமும், நாதாந்த நடனமும் ஆடுவதற்குக் கற்றுக் கொடுத்திருந்தாள். பெருந்தேவியை மணந்து கொள்ளக் கொடும்பாளூர் நகரில் பலர் போட்டி போட்டனர். அரச குலத்தைச் சேர்ந்த இளங்குமரன் பெருந்தேவியின் தந்தையைத் தன் உயர் குடும்பச் சிறப்பையும் விட்டுவிட்டு பெண் கேட்டான். ஆனால் பெருந்தேவியின் மனத்தைக் கவர்ந்தவர் ஓர் ஏழை ஓவியர். இசையின் மூலம், மனத்தைக் கவர்வது மூலம், தூரிகையின் மூலம் இதயத்தில் அழியாத நினைவை ஏற்படுத்திவிடத் துடிப்பவர். புகார் நகரம் அழிந்த பிறகு



அங்கிருந்து கொடும்பாளூர் அரண்மனையைச் சித்திரங்களால் சிங்காரிக்க வந்த இடத்தில் பெருந்தேவியின் அழகு விழியில் இதயத்தை ஒப்படைத்தார். இருவருக்கும் காதல் வளர்ந்தது. காதல் பூத்து நன்கு மலருமுன்னர் பெரும்புயல் அடித்தது. கொடும்பாளூரைக் களப்பிரர்கள் திடீரெனத் தாக்கினர். அதனால் அந்த நகரம் பாழ்பட்டது. அவள் தாயும், தந்தையும் உயிர் தப்பி உறையூரை அடைந்தனர். உறையூரிலே அவர்களால் அதிகநாள் தங்க முடியவில்லை. கலைக்கு மதிப்பில்லாத காலம். அதனால் அவள் பெற்றோர் மேலும் வடக்கே சென்றனர். எங்கெல்லாமோ சுற்றிக் கடைசியாக காஞ்சி மாநகர் வந்தடைந்தனர். காஞ்சி மாநகர் அச்சமயத்தில்தான் பகைவர் பயம் விட்டுக் கலகலப் படையத் தொடங்கியிருந்தது. பல்லவ மன்னர்கள் காஞ்சியைத் தலைநகராக்கிக் கொண்டு களப்பிரர்களைத் தமிழகத்திலிருந்து விரட்டத் திட்டமிட்டுக் கொண்டிருந்தனர். போர்வீரர்களாய் இருந்தால் உடனடியாக வேலை காத்திருந்தது. கத்தி பிடிப்பவர்களுக்குக் காலம். தூரிகையையும் கரிக்கோட்டையும் எவர் மதிப்பர்? நடனம் ஆடிப் பாமரர்களின் உணர்ச்சியை எழுப்பிவிட முடியுமென்றால் அங்கு வேலை இருந்தது. ஓவியரும் பெருந்தேவியும் அங்கு வாழ விரும்பவில்லை.

அச்சமயத்தில் சாளுக்கிய நாட்டு வணிகர் ஒருவரை ஓவியர் சந்தித்தார். அவர் ஓவியரின் திறமையைப் பயன்படுத்த எண்ணி வாதாபி நகருக்கு அழைத்தார். கலையா, வாழ்வா என்ற எண்ணத்தில் இருந்த ஓவியர் உடனே சம்மதித்தார். அந்தச் சமயம் பரிவாதினி பெருந்தேவியின் வயிற்றில் இருந்தாள். எங்காவது அமைதியாக இருந்தால் போதும் என்ற எண்ணம் அவருக்கிருந்தது. அதனால் அந்த வணிகருடன் உடனே வரச் சம்மதித்தார். பல நாள்கள் காட்டிலும் மேட்டிலும் பயணம் செய்து வாதாபியை அடைந்தனர்.

அங்குதான் பரிவாதினி பிறந்தாள். பெருந்தேவி பெருநிதியம் பெற்றுவிட்டது போல் மகிழ்ச்சியடைந்தாள்.

மகளைக் கண்ட மயக்கத்தில் பெருந்தேவியின் கனவு பரந்து விரிந்தது. மகளுக்குத் தன் கலை அறிவு முழுமையையும் கற்றுக் கொடுத்துவிட எண்ணினாள். ஓவியருக்கும் வாதாபி நகரில் நிறைய வேலையிருந்தது. பசியில்லை; மனத்தில் கவலையில்லை. பரிவாதினி தாயிடம் பரதக்கலை முழுமையும் கற்றாள். சிலப்பதிகாரம் போன்ற காவியங்களில் உள்ள நயங்களைக் கேட்டறிந்தாள். இன்னும் சிறிது காலம் பெருந்தேவி உயிருடன் இருந்திருந்தால் பரிவாதினிக்கு முழுக் கலையையும் கற்றுக் கொடுத்திருப்பாள். பெருந்தேவி கடும் மலைச்சுரத்தால் பீடிக்கப்பட்டாள். பிட்சுகள் பலர் ஔடதங்கள் பல கொடுத்தும் பயனில்லை.

பிட்சுகள் பெருந்தேவியின் பிணி போக்க ஓவியர் வீட்டிற்கு வரும்போதுதான் ஓவியரின் பெருமையை அறிந்தனர். அப்போது ஆண்ட புலகேசின் அஜந்தாக் காடுகளைப் பற்றி அறிந்திருந்தான். அங்கு ஐநூறாண்டுகளுக்கு மேலாக உள்ள மலைக் குகைகளைப் பற்றிக் கேள்விப் பட்டிருந்தான். முன்பே அங்கு தீட்டப்பட்டிருந்த அற்புத ஓவியங்களைப் பற்றி அறிந்திருந்தான். பௌத்த பிட்சுகளும் மன்னரின் ஓவிய ஆசையைப் பயன்படுத்திக் கொண்டனர். தாங்கள் அறிந்திருந்த அழியாத வண்ணங்களின் கலவை முறையைப் பற்றி அரசனுக்குத் தெரிவித்தனர். புலகேசின் துள்ளிக் குதித்தான். தன்காலத்தே அழியாத செயலொன்றைச் செய்ய முடிவு செய்தான். அழியாத வண்ண ரகசியம் வேறு யாவரும் அறியக்கூடாது என்று உறுதி பெற்றுக் கொண்டான். அப்படியும் வெளியே தெரிந்துவிடுமோ என்ற அச்சத்தில் ரகசிய ஒற்றர்கள் பலரை அமர்த்தியிருந்தான். நாட்டிலுள்ள ஓவியர்கள் வரவழைக்கப்பட்டனர். அஜந்தாக் குகைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அதற்கு முன்னர் பாறைகளைக் குடையும் வேலை நடந்தது. பரிவாதினியும், அவள் தந்தையும்



அப்போது கிருஷ்ணை நதிக்கரைக்குச் சென்றிருந்தனர். அவரது பணியையும் பயன்படுத்த விரும்பினான் அரசன். வாழ்நாளில் பாதிக்குமேல் துன்பத்திலேயே கழித்த ஓவியரின் உடலில் தளர்ச்சியும், வயது காரணமாக முதிர்ச்சியும் தோன்றினும் அவரது ஆர்வம் அஜந்தாவுக்குச் செல்லச் சம்மதித்தது.

பரிவாதினி தன் வரலாற்றைச் சுருக்கமாகக் கூறி முடித்தாள். மகேந்திரனை நோக்கி, ''இளவரசே! நீங்கள் எங்களுடன் இதுவரையில் இருந்ததால் எனக்கேற்பட்ட மகிழ்ச்சியைக் கூற முடியாது. முன்பே உங்கள்மேல் அதிக மதிப்பு வைத்திருக்கும் என் தந்தை நீங்கள் பல்லவ நாட்டு இளவரசர் என்பதை அறிந்தால் இன்னும் பெருமைப்படுவார். ஆனால் அவர் உங்களோடு எப்படி வருவார்? அவருக்கு இப்போது சாம்ராஜ்யங்கள் பெரிதாகத் தோன்றவில்லை. தான் செய்யும் மகத்தான கலைப்பணிதான் அவருக்கு முக்கியம். அவர் வராதபோது நான் மட்டும் எப்படி வருவேன்? ஐயனே! கண்ணின் வழி என் இதயம் புகுந்த நீங்கள் என் உள்ளத்தைக் கொண்டு செல்லுங்கள். உடல் மட்டும் இங்கு இருக்கட்டும்!'' - பரிவாதினியின் கண்களில் இதுவரை அடைபட்டிருந்த ஆர்வ நீர் பெருகியது.

''பரிவாதினி! துயரப்படாதே. நான் காஞ்சியை அடைந்த வுடன் என் தந்தையிடம் கூறி, படை திரட்டி வருவேன். நீண்ட காலமாக இருக்கும் பகைமை உணர்ச்சியை மனத்தில் கொண்டு பயங்கரப் போர் செய்வேன். பகைப்படைகளை நிர்மூலம் செய்வேன். புலகேசினைப் போரில் புறமுதுகு காணுவேன். சமாதானம் பேசுவான்; அப்போது 'புலகேசி, உன் நாடும் உயிரும் உனக்கு வேண்டுமாயின் பரிவாதினியையும், அவள் தந்தையை யும் பல்லவ நாட்டிற்குக் கொடுத்துவிடு' என்று கேட்பேன். உயிரின் மேல் பேராசை கொண்ட புலகேசின் உடனே

சமமதிப்பான். சாளுக்கியரின் திரையோடு நீ வருவாய். பல்லவ நாட்டில் பெரும் ஓவியக்கூடம் காண்பேன். நீ கற்றுணர்ந்த நாட்டிய சாத்திரத்தை எல்லாம் வண்ண விசித்திரமான ஓவியங்களாகத் தீட்டுவேன். பரத முனிவரின் சாத்திரத்தை ஓவியத்தின் மூலம் எல்லாரும் கற்றுணர வழி செய்வேன். இப்போது போய் வருகிறேன். நன்சொல் கூறி இன்முகத்தோடு விடை கொடு!'' என்றான்.

அவன் அக்கானகத்தை விட்டு இடையூறின்றி வெளியே செல்ல வழி காட்டினாள் பரிவாதினி. மகேந்திரன் அந்த இடத்தைவிட்டு அகலுமுன்பு, ''பரிவாதினி! மறந்துவிடாதே. என்னை மறந்தாலும் நீ பிறந்த பொன்னாட்டினர்க்கு அழியாத வண்ணத்தால் ஓவியந் தீட்டும் ரகசிய முறையை மட்டும் அறிந்துதவத் தவறாதே'' என்றான்.

பரிவாதினி ஒன்றுமே சொல்ல இயலாது சிலையென நின்றாள். இவர்கள் உரையாடிக் கொண்டிருந்ததைப் பிட்சுவின் உருவமொன்று அடர்ந்த புதர் மறைவினின்று கவனித்த வண்ணமிருந்தது. என்ன பேசுகிறார்கள் என்பதைத் தமிழ் மொழி தெரியா பிட்சுவினால் அறிய இயலவில்லை.

மகேந்திரன் காட்டின் குறுக்கே அமைந்திருந்த ஒற்றையடிப் பாதையின் வழியே விரைந்து வந்து கொண்டிருந்தான். காட்டைக் கடந்து விட்டால் காஞ்சியை அவன் அடைய அதிக நாள்கள் ஆகாது. காட்டைக் கடந்து அருகேயுள்ள கிராமத்துச் சாவடியை அடைந்தபோது இருட்டிவிட்டது. அந்த வேளையில் குதிரை மீதமர்ந்த நூறு வீரர்கள் அந்தக் கிராமத்தில் நுழைந்து கொண்டிருந்தனர். வராகக் கொடி பிடித்திருந்தனர் அவர்கள். பிராகிருத மொழியில் அவர்கள் பேசிக் கொண்டதிலிருந்து அஜந்தாக் காட்டிற்குச் செல்கின்றனர் என்பது தெரிய வந்தது. தன்னை எளிதில் சிறைப் பிடிக்கத்தான் அவர்களை மன்னர்



புலகேசின் அனுப்பியிருக்கிறார் என்பதை மகேந்திரன் உணர்ந்தான். தன்னைக் காப்பாற்றிய பரிவாதினியை நினைக்கும்போது அவனுக்குத் தன் கடமையின் முக்கியம் இன்னும் வலிவாக இதயத்தில் பாய்ந்தது.

## 7

காலம் அப்படியே ஓடவில்லை. பெரும் மாறுதல்களைத் தோற்றுவித்து அது ஓடியது. தந்தை சிம்ம விஷ்ணுவிற்குப் பிறகு மகேந்திரவர்மன், பல்லவ மண்டலத்தின் பேரரசராக முடிசூடிக் கொண்டார். தன் இளமைக் கனவுகள் ஒவ்வொன்றையும் செயலில் காண முயன்றார். போர்த் திறமையுடன் தன் கலைக் கனவுகளையும் அவர் தன் நாட்டில் காட்டத் தவறவில்லை. அவரை மணந்திருந்த தேவியாரும் கலையுள்ளம் நிறைந்தவராயிருந்தார். அஜந்தா மலைகளில் குடையப் பட்ட விஹாரங்களையும், சைத்யங்களையும் போல் தன் நாட்டில் அமைக்கப் பேராவல் கொண்டார். பல்லவ நாட்டின் துறைமுகப் பட்டினமான கடல் மல்லையில் நங்கூரம் பாய்ச்சி நிற்கும் வணிகக் கலங்களைக் காணச் செல்லும்போது அந்தப் பகுதியில் அடர்ந்திருக்கும் காடுகளையும், காட்டின் இடையே பெரும் யானைபோல நிற்கும் மொட்டைப் பாறைகளையும் ஒருமுறை நின்று பார்ப்பார். ஒவ்வொரு முறையும் அப்பக்கம் வரும்போது அவர் மனத்தை அந்தப் பாறைகள் - சிறு குன்றுகள் கவரும்.

பூரணமதி பொங்கிப் பொலியும் நாளில் அவற்றைத் தனியே வந்து காணுவார். பாறைகளில் குகைகள் குடையப்படுவது போன்ற கனவு. அவற்றின் தூண்களையும், குகைகளுக்குள்

அமைக்க வேண்டிய இறையகங்களையும் பற்றியே எப்பொழுதும் நினைவு. பாறைகளின் தன்மையைச் சோதித்து வந்து அத்துறை அறிஞர்கள் தங்கள் கருத்தைத் தெரிவித்து விட்டார்கள். அங்குள்ள பாறைகளில் குடைவதற்கேற்ற பாறைகளையும், குன்றுகளையும் அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

அரசியல் பொறுப்புகளும், அறிஞர்கள் குழுவில் தங்கியிருந்து எப்போதும் அளவளாவுவதும், வேற்று நாட்டினர் படையெடுத்து வந்து தாக்காதிருக்க எப்போதும் கண்ணுங் கருத்துமாக ஒற்றர்கள் குழுவுடன் தொடர்பு கொண்டிருப்பதுமாக அவர் பொழுது கழிந்தது. அவை தவிர நாட்டில் ஏராளமான சமயங்கள்; அவர்கள் ஒருவரோடொருவர் தாக்கிக் குழப்பம் செய்து வந்தனர். பாசுபதரும், காளாமுகரும், காபாலிகரும், சமணரும், பௌத்தரும் ஒன்றுசேர்ந்து வாழ வழி காணுவதில் அவர் கவனத்தைச் செலுத்தினார். அவர்களுடைய குறைபாடுகளையெல்லாம் எடுத்துக்காட்ட நாடகம் ஒன்றைத் தயாரிப்பதில் சிந்தனையைச் செலுத்தினார். காஞ்சி நகரத்தை எழிலுடன் விளங்கச் செய்வதிலும், கடிகைகளையும், தமிழ்க் கல்லூரிகளையும் ஏற்படுத்துவதில் அதிக அக்கறை காட்டினார். தன் ஒரே மகன் நரசிம்ம வர்மனைச் சிறந்த கலைஞனாகவும், பெரும் மல்லனாகவும் ஆக்குவதில் கவனத்தைச் செலுத்தினார். சிற்பிகளுடன் தாம் உரையாடிக் கொண்டிருக்கும் போது தன் மகனும் உடனிருந்து அறிய வழி செய்வார்.

இப்படிக் காலத்தைப் பொன்போல் சிறப்பாகக் கழியச் செய்து கொண்டிருந்ததால் மகேந்திரன், பரிவாதினியை நினைக்க முடியாமல் போய்விட்டது.

ஆனால், சிற்பத்திற்கேற்ற பாறைகளைத் சோதித்தறிய நாட்டின் நாலா பக்கமும் சென்றவர்கள் திரும்பி வந்திருந்தனர். அவர்களுள் கொடும்பாளூர்ப் பகுதிக்குச் சென்றவர்கள் முக்கிய



மான செய்தியைத் தெரிவித்தனர். கொடும்பாளூர் நாட்டில் சமண முனிவர்கள் தங்கியிருந்த மலைச் சரிவைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்த இடத்தில் அற்புதமான குடைவரைக் கோயிலைப் படைக்கலாம் என்று கூறினார்கள். முன்பே சமண முனிவர்கள் சிலர்,அங்கு தனிமையில் தவம் செய்வதையும் கூறினார்கள். அரசர் மகேந்திரவர்மன் வந்தால் அவருக்கு வேண்டிய உதவிகள் அனைத்தும் செய்வதாக அவர் வாக்களித்திருப்பதாகச் செய்தி அறிந்து வந்தவர்கள் கூறினார்கள்.

கொடும்பாளூர் என்றவுடன் மகேந்திரனுக்குப் பரிவாதினியின் நினைவு ஏற்பட்டுவிட்டது. அஜந்தாவின் நினைவு எழுந்து விட்டது. ஓவியரின் நினைவு எழுந்து விட்டது. பரிவாதினியிடம் தெரிவித்து வந்தவாறு தான் நடந்து கொள்ளாததை நினைத்தபோது அவர் நெஞ்சம் துடித்தது. 'பரிவாதினி' என்று கூவியவாறு அவர் அப்போதே அவளைக் காணச் செல்பவர் போல் எழுந்தார். எழுந்தவர் எதிரே அச்சமயம் புலகேசின் படையெடுப்பைப் பற்றிய செய்தியைத் தெரிவிக்கும் ஒற்றன் வந்து நின்றான்.

இளவரசன் மகேந்திரன் இளவயதில் அந்தக் குகைகளுக்கு வந்து ஓவியங்களைக் கண்டு சென்றான எனும் செய்தி புலகேசினுக்கு எட்டியதும் அவன் அடங்காக் கோபம் கொண்டான். அவனே நேரிடையாக அஜந்தாக் காடுகளுக்கு வந்து பிட்சுகளைச் சந்தித்தான்; ஓவியர்களைச் சந்தித்துப் பேசினான்; முதிய ஓவியரின் சீடனாகக் குணபரன் என்ற மாற்றுப் பெயருடன் மகேந்திரன் இருந்ததைப் புலகேசின் அறிந்ததும் தன் கடுமையான முகத்தை இன்னும் கடுமையாக்கிக் கொண்டதோடு வேறேதும் பேசாமல் சென்று விட்டான். அங்கே எந்தவிதக் கோபதாபங்களையும் புலப்படுத்த வில்லை. வர்ண ரகசியங்கள் வெளியாகவில்லை என்பதை

மட்டும் அறிந்து திருப்தி அடைந்தான். ஆனால், புலகேசின் பெரும் திட்டம் தீட்டுகிறான் என்றே எல்லாரும் எண்ணினர். அந்தக் குகைப் பகுதியே இரண்டு நாள்கள் களையிழந்து கிடந்தது.

முதியவர் தன் மகள் பரிவாதினியை அழைத்துப் பல்லவ இளவரசரைப் பற்றிக் கேட்டார். பரிவாதினி என்ன சொல்வாள், பாவம்? புலகேசின் பிட்சுவுக்கு அனுப்பிய ஓலையைத் தான் கண்டேன் என்றோ, தன்னாலேதான் இளவரசர் தப்பி ஓடினார் என்றோ அவள் ஏனோ தந்தையிடமும் கூறவில்லை. அவள் விம்மினாள். நடந்த செய்தியைத் தந்தையிடம் தெரிவிக்க முடியாமல் தவித்தாள்.

''அப்பா! நாம் இங்கு இருக்க வேண்டாமப்பா. எனக்கென் னவோ இங்கிருப்பதில் பெரும் அபாயம் ஏற்படும்போல உள்ளுணர்வு உணர்த்துகிறதப்பா! நாம் காஞ்சி செல்வோம். அங்கே இளவரசர் நமக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பார். வாழ்நாளின் எஞ்சிய பகுதியை நாம் அமைதியாகக் கழிப்போம்'' என்று பரிவாதினி தந்தையை வற்புறுத்தினாள். ஆனால் முதியவர் அதற்கு மறுத்துவிட்டார். அவர் புற உலக நடப்புகளைப் பற்றியே கவனிப்பதில்லை.

புதிய குகைகள் குடையப்பட்டன. அதிலுள்ள பாறைச் சுவரில் அவர் இராமாயண இதிகாசத்து ஓவியங்களை வரைவதில் இப்போது கவனம் செலுத்தத் தொடங்கியிருந்தார். மகள் தொடர்ந்து வற்புறுத்திய போது -

''சாளுக்கிய மன்னரின் உப்பைத் தின்றுவிட்டு அவருக்குத் துரோகம் நினைப்பது சரியன்று. என் வாழ்நாளின் கடைசிக் காலத்தை இங்கேயே கழிக்க விரும்புகிறேன்'' என்று அழுத்த மாகக் கூறிவிட்டார். அவருக்குத் தன் மகளின் உள்ளத்தைப் பற்றிக் கவலையே இல்லையோ?



பரிவாதினி அந்தக் கற்றூணோடு கற்றூணாகச் சிலையென நின்று கண்ணீர் வடித்தாள்; விம்மினாள்.

அவள் விம்மலுக்கு விடிவு காலம் வந்தது போலும்! ஒரு நாள் பிட்சு ஒருவர் முதியவரைத் தேடி வந்தார். தெற்கே காஞ்சி நோக்கி மன்னர் புலகேசின் படைகளுடன் புறப்படுவதாகவும், ஓவியர்கள் பலரையும் அழைத்துச் செல்வதாகவும் முதியவரும் உடனே புறப்பட வேண்டும் என்றும் கூறினார். பரிவாதினி அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. ஆனால் முதியவருக்கு அதில் நம்பிக்கையில்லை. இதில் ஏதோ சூழ்ச்சி இருக்க வேண்டும் என்று எண்ணினார். படையெடுப்புக்கும் ஓவியருக்கும் என்ன சம்பந்தம் என்று அவருக்குப் புரிய வில்லை. ஆனால் அந்த பிட்சு சாதுர்யமாக, ''அரசர் வெற்றி பெறுவது நிச்சயம். வெற்றி பெற்றவுடன் காஞ்சி மாநகரில் அவ்வெற்றியை விளக்கும் அற்புதச் சித்திரங்களைத் தீட்டி வைப்பது அவர் எண்ணம். அதற்காகவே உங்களை அழைத்துச் செல்கிறார். மேலும் நீங்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர். உங்கள் திருநாட்டைக் காணும் அவா உங்களுக்கு இருக்காதா...?'' என்று கூறவும், அவர் அரைமனத்துடன் சம்மதித்தார். முற்றுப்பெறா ஓவியங்களை விட்டுச் செல்லவே அவருக்கு மனமில்லை. எனினும் அரச கட்டளையாயிற்றே!

அஜந்தாக் குகைகளுக்கு வந்த சமயத்திலேயே புலகேசினுக்குப் பரிவாதினியின்மீது சந்தேகம் உதித்தது. அவள் மூலமாக மகேந்திரனைப் பிடித்துவிட வேண்டும் என்று திட்டம் தீட்டினான். திட்டம் நிறைவேறும் வேளை வந்தது.

படைவீரர்களுடன் ஓவியரையும் அவர் மகளையும் அழைத்துச் சென்று, இடையில் அவர்கள் இருவரையும் படை வீரர்களிடமிருந்து தன்னிச்சையாகப் பிரித்து விடுவதென்றும், அவர்கள் செல்லுமிடங்களைப் பின்தொடர்ந்து மாறுவேடத்தில்

சாளுக்கிய ஒற்றன் செல்ல வேண்டும் என்பதும் சத்யாச்ரய புலகேசினின் திட்டம். 'அஜந்தாக் குகைகளிலிருந்தபோது பரிவாதினியிடம் மகேந்திரன் நெருங்கிப் பழகியதால் இப்போதும் அவளை மறக்காமல் மேலும் சந்திப்பார். அந்தச் சமயம் பார்த்து பல்லவ மன்னரைக் கொன்றுவிட வேண்டும் என்றும் புலகேசின் கனவு கண்டான். அவனுடைய முதல் திட்டப்படி எல்லாம் நடந்தது. ஆனால் இந்த விவரத்தைப் பரிவாதினி அறியாள்.

ஆயிரக்கணக்கான படைவீரர்கள் முன்செல்ல, பின்னால் உணவுப் பொருள்களைச் சுமந்து யானைகளும் ஒட்டகங்களும் வர, கூண்டு வண்டியொன்றில் முதியவரும் அவர் மகளும் பயணமாயினர்.

அவளும் படைவீரர்களிடமிருந்து தப்பிச் சென்றுவிட வேண்டும் என்றே சமயத்தை எதிர்பார்த்திருந்தாள். ஓரிடத்தில் சாளுக்கியப் படைகள் காலவரையறையின்றித் தங்கப் போவதாகப் பரிவாதினி அறிந்தாள். படைவீரர்களுக்குப் பூரண ஓய்வு அளிக்கப்பட்ட அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அங்கிருந்து தப்பிவிட வேண்டுமென்று பரிவாதினி தந்தைக்கு யோசனை கூறினாள். முதலில் சம்மதிக்காத முதியவர், மகளின் யோசனைப்படி ஒருநாள் பொழுது புலரா முன்னர் படைவீரர்களின் பிடியிலிருந்து தப்பிக் கிளம்பி விட்டார்.



## 8

மகேந்திரவர்மன் கட்டளைப்படி வெறும்பாறைகள் குடைவரைக் கோயில்களாயின. மகேந்திரவாடி, மண்டகப்பட்டு, மாமண்டூர், சிராப்பள்ளி முதலிய இடங்களில் பாறைகளைக் குடையும் பணி எவ்விதம் நடக்கிறதென்பதைக் காண மகேந்திரவர்மன் புறப்பட்டார். வெற்றிகரமாக எண்ணம் ஈடேறுவதைக் கண்டபின் மீண்டும் கடல் மல்லைக்கு வந்தார். ஐந்து இறையகங்களையுடைய குடைவரைக் கோயில் அமைக்கப் படுவதைத் தொலைவிலே நின்று ரசித்த வண்ணம் இருந்தார். அவர் அருகே நரசிம்மவர்மன் நின்று கொண்டிருந்தான். தந்தை சிந்தனையிலாழ்ந்திருக்கும் போது அவன் ஏதும் பேசுவதில்லை. தந்தையின் மனத்துள் புகுந்து அவர் சிந்தனையறிந்து அவர்போன்று தானும் எண்ண முயல்வான்.

மகேந்திரன் தனக்குள்ளேயே ரசித்துக் கொண்டார். பிறகு தன் மகன் பக்கம் திரும்பி, "குழந்தாய்! அஜந்தாக் குடைவரை மண்டபங்கள் எவ்விதமிருக்கும் என வினவுவாயே... இதோ, இங்கிருந்து பார். அதோ! பாறைகளுக்கும் புதர்களுக்குமிடையே அரைவட்டமாகத் தோற்றமளிக்கின்றனவே அவை வளைந்து தோன்றுகின்றனவே இதைப் போன்றுதான் அவையும். ஆனால் அவை உயரமான மலைச் சரிவில் அமைந்தவை. அங்கு கொடிய விலங்குகள் எந்நேரமும் நடமாடும். அந்நாட்டு அரசரும் அந்தக் குணமுடையவரே. கலைஞரைக் கட்டுப் படுத்தி வேலை வாங்குகிறார். நம் பணி அன்புப்பணி. 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்றன்றோ நாவுக்கரசு அடிகளார் அன்று சொன்னார்? என் காலத்திற்குப் பிறகு இந்தப் பணியை

நீ தொடர்ந்து செய்ய வேண்டும். ஒவ்வொரு குகை மண்டபத்துப் பாறைச் சுவர்களையும் வண்ண விசித்திரத்தால் அலங்கரிக்க வேண்டும் -'' என்று கூறி வந்தவர், சட்டென ஏனோ நிறுத்தினார்.

நரசிம்மன் தொண்டையைக் கனைத்துக் கொண்டான். இதுவரை சொல்லத் துடித்ததைச் சொல்ல முயன்றான். ''தந்தையே! தாங்கள் தெற்கே சென்றிருந்தபோது உங்களைத் தேடி காஞ்சி அரண்மனைக்கு ஒரு பெண்மணி வந்தாள். அவள் மேனியில் புழுதி படிந்திருந்தது. அவள் மிகக் களைத்துக் காணப்பட்டாள். அவள் கேசம் காற்றிலே அலையும்போது அவள் உள்ளமும் யாரையோ தேடி அலைவதைக் காட்டின. வெகு தூரத்திலிருந்து தான் வருவதாகவும், எப்படியும் உங்களைச் சந்திக்க வேண்டும் என்றும் கூறினாள். நாங்கள் அவளை நம்பவில்லை. வற்புறுத்தி அவள் வரலாற்றைக் கேட்டபோது, பதினைந்தாண்டுகளுக்கு முன்பு உங்களைச் சந்தித்ததைப் பற்றிக் கூறினாள். தந்தையே! அவளுக்குச் சித்தம் கலங்கியிருக்க வேண்டும் என்றெண்ணினேன்.''

நரசிம்மவர்மன் கூறி முடிப்பதற்குள், மகேந்திரவர்மன் தன் மகன் பக்கம் பரபரப்புடன் திரும்பி, ''என்னைத் தேடி வந்தாளா? மகனே! ஏன் என்னிடம் இதுவரை கூறவில்லை? அவள் இப்போது எங்கிருக்கிறாள்? அவள் எப்படி இருந்தாள்? அவளுடன் முதியவரொருவர் வந்தாரா? மகனே! நல்லதொரு வாய்ப்பை இழந்து விட்டாயடா, மகனே! அவர்தானடா அஜந்தாவில் அற்புத ஓவியம் படைத்த கலைமன்னர்!'' என்றார். அவருக்குப் பழைய நினைவுகள் பொங்கி எழுந்தன. அந்த ஓவியரின் மகளிடம், தாம் கடைசியாகக் கூறி வந்ததை மீண்டும் நினைவுபடுத்திக் கொண்டார்: ''பரிவாதினி! என்னை மறந்தாலும் நீ பிறந்த பொன்னாட்டினர்க்கு, அழியாத



வண்ணத்தால் ஓவியம் தீட்டும் ரகசிய முறையை மட்டும் அறிந்துவரத் தவறாதே'' - ஒருவேளை அவள் அந்த ரகசியத்தை அறிந்து வந்திருக்கிறாளோ? புலகேசியின் பிடியினின்று எளிதாக வருவது இயலாதே -

அவர் மனத்தில் ஆயிரம் குழப்பங்கள். நாட்டில் நாலா திக்குகளிலும் அங்க அடையாளங்களைச் சொல்லி அப்படி ஒரு முதியவரையும், ஒரு பெண்ணையும் கண்டால் உடனே அழைத்துவரக் கட்டளையிட்டார்.

மறு பௌர்ணமி நெருங்கிக் கொண்டிருந்தது. சித்தன்ன வாயிலில் பௌர்ணமியன்று அரசர் மகேந்திரவர்மர் வந்து சேர்வதாகத் திட்டம் முன்பே வகுக்கப் பட்டிருந்தது. சித்தன்ன வாசலில் பாண்டிய மன்னர்கள் தீட்டியிருந்த சித்திரங்களைப் போல் தாமும் தீட்டுவதைப் பற்றி அன்று யோசனை செய்யவிருந்தார் மகேந்திரர். காஞ்சியிலிருந்து ஓவியர்கள் சிலரையும் உடன் அழைத்துக் கொண்டார். மகேந்திர வர்மருக்குப் பல துறையிலும் கருத்தினை வழங்கும் குரு ருத்திராசார்யாரையும் அங்கு சந்திப்பதாகத் தெரிவித்திருந்தார்.

குதிரைகள் ஆயத்தமாயின. புறப்படும் நேரம் வரை மகேந்திரனுக்கு அந்த முதியவரைச் சந்தித்துவிட முடியுமென்ற நம்பிக்கை. 'பரிவாதினியும் உடனிருந்தால் சித்தன்னவாசலைத் தென்னாட்டு அஜந்தாவாக உருவாக்கி விடலாமே - உம்; நம் துரதிர்ஷ்டம்' என்று மகேந்திரன் வருந்தினான்.

# 9

வானம் தூய்மையாக இருந்தது. வெண்ணீல நிறத்தைப் பின்னணியாகக் கொண்டு வட்ட முழுநிலா ஒளி வீசிக் கொண்டிருந்தது. சித்தன்ன வாசல் மீண்டும் புத்துயிர் பெற்று விளங்கியது. அங்கே அழகான குடைவரை மண்டபமொன்று அமைக்கப் பட்டிருந்தது. மண்டபத்துக்கருகே இருந்த பெரும் பாறையிலே கம்பீரமாக மகேந்திரவர்மன் அமர்ந்திருந்தார். அவரது மணி முடியினின்று அந்த நிலவில் வீசிய ஒளியானது மற்றொரு நட்சத்திரம் போன்று தோற்றமளித்தது.

அந்த மண்டபத்தே தீட்டப்பட வேண்டிய ஓவியத்தைப் பற்றிக் கலந்து பேச ருத்திராச்சாரியார் வந்திருந்தார். காஞ்சி நகரத்தினின்று மகேந்திரனுடன் வந்திருந்த ஓவியர் சித்திர சேனனும் உடன் இருந்தான். சமணத் துறவிகள் அமர்ந்திருந் தனர். மகேந்திரவர்மன் தான் அஜந்தாவில் கண்ட அற்புதத்தை அங்கிருப்பவர்களுக்குக் கதைபோல் உணர்ச்சி யுடன் விவரித்த வண்ணமிருந்தார். கண்ட சித்திரங்களின் உயர்வைப் பற்றிக் கூறும்போது உணர்ச்சிவசப்பட்டார். அவருக்கு அந்த முதிய ஓவியரின் நினைவு மீண்டும் வந்துவிட்டது. அவரது அருமை மகள் பரிவாதினியின் இனிய முகம் நினைவுக்கு வந்துவிட்டது. அவள் பண்ணுடன் நடனமிடுவது போன்றும், தான் வீணையை மீட்டுவது போன்றும் கண்முன் தோன்றத் தொடங்கிவிட்டன. அவர் தன் குரு ருத்திராச்சாரியாரை நோக்கிக் கூறுவார்:

''பெருந்தகையீர்! உங்கள் அருளால் இப்போது வீணையில் ஒன்பது நரம்புகளையும் புகுத்தி விட்டேன். நீங்கள் கூறிய



ஸ்வரங்களை அதில் மீட்டிப் பார்த்தேன். வெற்றி, வெற்றி, வெற்றி. குருநாதரே! தமிழநாடெங்கும் அக்கருவியைப் பரப்ப வேண்டும். அந்த ஸ்வர வரிசைகளைச் செதுக்கி வைக்க ஏற்ற இடம், குடுமியாமலைதான் என்று தோன்றுகிறது. ஆனால், இவ்வளவு வெற்றிக்கும் காரணம் அஜந்தாக் குகைகளின் அற்புதப் படைப்பில் ஈடுபட்டிருந்த முதியவர் மகள் பரிவாதினிதான். சில திங்கட்கு முன் என்னைத்தேடிக் காஞ்சிக்கு ஒரு பெண் வந்தாளாம். அவள் பரிவாதினியாகத்தான் இருக்க வேண்டும். அவள் மட்டும் இங்கிருந்தால் இநத மண்டபத்தை மற்றோர் அஜந்தாவாக்கி விடுவேன்!'' என்று உணர்ச்சி மிகுதியால் நெஞ்சு தழுதழுக்கக் கூறிச் சித்திரசேனன் பக்கம் திரும்பி, ''இளைஞரே! உம்மைப் போன்று இளம் வயதில் அங்கு இரவென்று பாராமல் மழை என்று பாராமல் அலைந் தேன். கொடிய வேங்கையின் வாயில் சிக்க எத்தனையோ வாய்ப்புகள் ஏறபட்டன. இறைவன் அருள் பூரணமாக இருந்ததால் உயிர் தப்பினேன். அங்குதான் பரிவாதினியைச் சந்தித்தேன். அவளுக்கு அங்கு தீட்டப்பட்டுள்ள ஓவிய முறை தெரியும். அவளுக்கு அழியாத அந்த வண்ண ரகசியமும் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டுதான் அவளைக் காஞ்சிக்கு வருமாறு வேண்டினேன். அவள் இப்போது இருந்திருந்தால்...'' மகேந்திரன் முடிக்கவில்லை.

நூபுரத்தின் ஓசை 'கலீர் கலீ'ரென யாரோ பாறையின் மீது நடந்து வரும் ஓசை கேட்டது. மகிழ மலரின் இனிய மணம் எங்கிருந்தோ கமழ்ந்தது. மங்கிய நிலவொளியில் தேவமாது போன்றொருத்தி நடந்து வருவது தெரிந்தது. எல்லாரும் அந்தப் பெண் உருவம் வரும் திக்கையே நோக்கினர்.

பரிவாதினிதான் அங்கு நடந்து வந்து கொண்டிருந்தாள்.

## 10

அந்தப் பாறையிலே பரிவாதினியும் மகேந்திரவர்மனும் அமர்ந்து நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தனர். புலகேசி னுடைய கட்டளைப்படி அஜந்தாக் குகைகளினின்று படைவீரர் களுடன் தாங்கள் புறப்பட்டதையும், வழியிலே தப்பி வந்ததை யும், உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தான் மகேந்திரவர்மன். அனுபவ அறிவும், ராஜதந்திரமும் மிகுந்த அவன் மனத்தில் பற்பல எண்ணங்கள் ஓடின. புலகேசின் படைகளைத் திரட்டிக் கிருஷ்ணையாற்றங் கரையில் ஏன் தங்க வைத்திருக்கிறான் என்பது ஒன்று. முதியவரும் அவருடைய மகளும் அவ்வளவு எளிதில் பாடி வீட்டினின்று தப்பி ஓடுவதைக் கவனியாது அவர்கள் இருந்திருப்பார்களா? -அப்படியிருந்தால் அவர் களுடைய சதித்திட்டத்திற்கு அடிப்படையாக அது இருந்திருக்க வேண்டும் என எண்ணினார். தன் மனத்திலெழுந்ததை அவரால் வெளியே புலப்படுத்த முடியவில்லை. ஏனெனில் பரிவாதினி யின் முகம் அந்த மங்கிய நிலவொளியில் முன்னைவிட அதிக ஒளியுடன் விளங்கியது. அலைந்த களைப்பும், ஏமாற்ற ரேகை யும், துக்கச் சாயையும் அந்த முகத்தில் காணப்பட்டாலும், அதில் தனியானதொரு கவர்ச்சியிருப்பதாக மகேந்திரவர்மன் எண்ணினார். பதினைந்தாண்டுகளுக்குப் பிறகு அவளைப் பார்க்கும்போது மகேந்திரன் உள்ளக்கடல் ஆர்ப்பரித்துப் பொங்கியது. தன்னை ஒருமுறை நோக்கிக் கொண்டார். போர்க்களத்தில் ஏற்பட்ட வடு; எப்போதும் சிந்திப்பதால் ஏற்பட்ட கவலைக் கோடுகள் மிகுந்த முகம் -



இதயத்திலுள்ள காதலையும் பாசத்தையும் மூவரன்றோ பங்கு போட்டிருந்தனர்! ஒருவர், தன்னிதயம் அறிந்து நடக்கும் பட்டத்து ராணி - மாமல்லனைப் பெற்ற செல்வி; இரண்டாமவர், பல்லவ நாட்டின் வருங்கால ஒளியாகத் திகழப்போகும் திருமகன் நரசிம்மன் மூன்றாவது பல்லவ நாட்டை பரிமளிக்கச் செய்யப் போகும் கலை.

பரிவாதினிக்கு இடம்?

"பரிவாதினி! உன் தந்தை எங்கே? அவரை உடனே காண வேண்டும். அதோ பார்த்தாயா, சித்தன்னவாசல் மண்டபம்? அங்கே அஜந்தாவைக் கொண்டு வரப் போகிறேன். உடனே பணிகளைத் தொடங்க வேண்டும்" என்று மகேந்திரன் கேட்டார்.

பரிவாதினியிடமிருந்து மறுமொழி வரவில்லை. அந்த மங்கிய ஒளியிலும் மழைக்காலத் தடாகம் போல நிரம்பியிருந்த அந்தக் கண்ணீர்க் குளத்திலிருந்து இரண்டு ஆணி முத்துகள், மகேந்திரனுக்கு நடந்ததைக் கூறுவதற்காகக் கீழே குதிக்க ஆயத்தமாக இருந்தன.

"பரிவாதினி, பரிவாதினி! நடந்தவற்றைக் கூறு. உன் தந்தை எங்கே?" என்று கேட்டு மகேநதிரன் எழுந்து அவள் கரங்களைப் பற்றினார்.

"உங்கள் குரு... என் தந்தை வரும் வழியில் இறந்து விட்டார், அரசே...!" பரிவாதினி விம்மினாள்.

"கலைமன்னரின் காலம் முடிந்து விட்டதா? ஐயோ! என்னைப் போன்ற துர்ப்பாக்கியவான் எவருமிருக்க மாட்டார்கள். என்னிடம் படைபலம் இருந்தென்ன? இந்திரஜாலம், மகேந்திர ஜாலம் புரிபவன் என்று மக்கள் புகழ்ந்து என்ன? ஓவியன்

உயிரைக் காக்க முடியாத நான் ஒரு மன்னனா? பதினைந் தாண்டுகளை வெவ்வேறு நோக்கத்தில் கழித்தேன். சமணர்களும், பௌத்தர்களும், கபாலிகர்களும், பாசுபதர்களும் நாடு முழுமையும் குழப்பம் விளைவித்திருந்ததை அன்புப் போரால் அடக்கினேன். அவர்கள் போக்கை விளக்கும் ''மத்த விலாஸம்'' என்னும் நாடகம் எழுதினேன். இவற்றையெல்லாம் பெருமையுடன் உன்னிடம் கூறக் கனவு கண்டு கொண்டிருந் தேன். பரிவாதினி! உன் இதயம் துக்கத்தில் துவண்டிருக்கும் போது என் கலையுலக வெற்றியைக் கூறிப் பலன் என்ன? என் குருதேவர் ஓவியர் வந்திருந்தால் அழியா வண்ணத்துடன் அஜந்தாவைத் தமிழகத்தில் படைக்க எண்ணினேனே. அது கனவாகத்தான் போக வேண்டுமா...?'' கலங்கியறியா மாமன்னன் மகேந்திரனின் கண்கள் கலங்கின. நெஞ்சு தழுதழுத்தது.

அப்போது பரிவாதினி மகேந்திரன் கண்களைத் துடைத்தாள்.

''அரசர்க்கரசே! என்னைப் பொறுத்தருளுங்கள். உங்களைத் தீண்டும் அளவுக்கு நான் பேறு பெறவில்லை. இருந்தாலும் மாற்றாருக்குக் கூற்றுவர் போலிருந்து அவர்களைக் கலங்க வைக்கும் நீங்கள் கலங்குவதா? என் தந்தை இறந்தது எனக்கு வருத்தம் தான்; நடக்க முடியாது நாங்கள் பசியால் வாடி நடந்து வரும்போது என் தந்தையைக் கடுஞ்சுரம் பற்றியது. அதனை நீக்கும் காட்டு மூலிகைகள் எனக்குத் தெரியும். அவற்றைக் கொண்டுவர அடுத்த காட்டிற்கு விரைந்தேன். மூலிகை கிடைத்தது; ஆனால் அதற்குள் தந்தை இறந்துவிட்டார்.

''இந்த உலகத்தில் நான் தன்னந்தனியளானேன். நானும் அங்கேயே உயிர் நீத்திருக்கலாம். எந்தவித உலக பந்தமும் எனக்கில்லை. ஆனால், அரசே! என் இதயம் ஒரு பொக்கிஷத் தைச் சுமந்து வந்திருக்கிறது. அதை உங்களிடம் ஒப்படைத்து விட்டு என் உயிரை மாய்த்துக் கொள்ளலாம் என வந்தேன்'' என்று கூறிய பரிவாதினி தான் காஞ்சிக்கு வந்தடைந்ததை உணர்ச்சியுடன் உரைக்கலுற்றாள்.



காஞ்சிக் கோட்டைக்குள் நுழைந்த பரிவாதினிக்குத் தன் கண்ணைத் தன்னால் நம்பமுடியவில்லை. தன் தாய் கூறியிருக் கிறாள் காஞ்சியின் தோற்றத்தைப் பற்றி. அதற்கும் இதற்கும் எவ்வளவு வித்தியாசம்! தன் தாயும் - தந்தையும் கலைக்கு ஆதரவு இருக்கும் என்று அந்த நாள்களில் வீதிகளில் அலைந்த அதே காஞ்சி -

இன்றோ - அதோ வேத கோஷங்கள், தீந்தமிழ் முழக்கம். வீதிகளில் பல நாட்டு மக்கள். வெவ்வேறு மொழி பேசுவோர் மாளிகைகள் புதுப் பொலிவுடன் திகழ்ந்தன. அகலமான வீதிகள் அமைக்கப்பட்டிருந்தன. மன்னரின் மாளிகையும், புத்த விஹாரங்களும், சமணப் பள்ளிகளும் திருமடங்களும் - ஆகா; இவற்றைக் காணாத கண்ணும் ஒரு கண்ணா?

அந்த மாபெரும் நகரத்தில் அரசிளங் குமரனை எங்கே சந்திப்பது? பரிவாதினி வீதியிலே அலைந்தாள். அவளுக்கு இப்போது சாளுக்கியர்களைப் பற்றிப் பயமில்லை. ஆனால் தன்னைக் கண்ட எவரேனும் சந்தேகப்பட்டு அந்நிய நாட்டு ஒற்றரெனக் கருதிச் சிறையிட முனைந்தால்?

பரிவாதினி மெல்ல அங்கும் இங்கும் கேட்ட வண்ணம் அரண்மனையை அடைந்துவிட்டாள். மாளிகைக் காவற் காரரிடம் இளவரசர் மகேந்திரவர்மனைக் காண வேண்டும் எனக் கேட்டாள். காவலர்கள் சிரித்தனர். அவளை ஏற இறங்க நோக்கினர். இந்த உலகத்து மக்களிடம் அதிகம் பழகாமல் தந்தையின் போதனையொன்றிலேயே வளர்ந்து, காட்டுச்

சூழ்நிலையில் வாழ்ந்து பழகிப்போன அவளுக்குப் பயம் என்பதே இல்லை.

''என்ய்யா சிரிக்கிறீர்கள்? உங்கள் மன்னர் இப்படிச் சிரிப்பதற்குத்தான் கற்றுக் கொடுத்திருக்கிறாரோ?'' என்று அவள் சீறினாள்.

''ஆமாம் பெண்ணே! எங்கள் அரசர் இந்திரஜால மகேந்திர ஜாலம் அறிந்தவர்; அவர் எல்லாரும் நகைப்பதற்கு இப்போது நாடகம் ஒன்று எழுதியிருக்கிறார். அதில் - உன்னைப் போல ஒரு பெண் - கபாலிகப் பெண் - ''

காவற்காரன் முடிக்கவில்லை. பரிவாதினி புலிபோல உறுமினாள்: ''ஐயா! எச்சரிக்கை! நல்ல காவலர்களை நியமித்திருக்கிறார் உங்கள் மன்னவர். இளவரசர் மகேந்திரரிடம் கூறி உங்களுக்குத் தண்டனை கொடுக்கச் சொல்கிறேன்...''

மீண்டும் காவற்காரர்கள் நகைத்தனர். ஆனால் ஒருவன் மட்டும், ''பெண்ணே! இளவரசர் மகேந்திரர் என்பதற்குத்தான் நாங்கள் நகைக்கிறோம். இப்போது மகேந்திரர் இளவரசரல்லர். அவர் மாமன்னர். இளவரசர் நரசிம்மவர்மர் - புஜபல பராக்கிரமம் மிகுந்தவர். நீ இந்த நாட்டுப் பெண் இல்லை போலத் தோன்றுகிறது.''

பரிவாதினி புரிந்து கொண்டாள். இளவரசர் மகேந்திரர் இப்போது பாராளும் சக்கரவர்த்தி. ஆகா! என்ன பாக்யம்! என்ன பெருமை - ஏ! கண்களே! நீங்கள் இப்போது மாமன்னரைக் காணப் போகிறீர்கள். நீங்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு பழகிக் களித்தீர்களே! இதயத்தின் தூதராக அவரிடம் பறந்தீர்களே, அவர் இப்போது பேரரசர். முத்துப்பல் வரிசைகளே, மோகனச் சிரிப்புப் பெண்ணே! உங்கள் பாடு யோகம்தான். நீங்கள்



கலையரசருடனன்றோ இனிப் பேசிப் பழகி முறுவல் பூக்கப் போகிறீர்கள்!''

''ஐயா, ஐயா! என்னால் அவரை - அவரைக் காண முடியுமா?''

''எங்கள் மாமன்னரை எப்போது வேண்டுமானாலும் காணலாம். ஆனால், அவர் இப்போது வெளியூருக்குச் சென்றிருக்கிறார்கள்.''

''எங்கே என்பதை நானறியலாமா?''

''நாடும் நகரமும் நன்கறிந்ததை நீ அறிவதில் என்ன தடை? எங்கள் அரசர் இப்போது மண்டகப்பட்டிற்குப் போயிருக்கலாம். மகேந்திரவாடிக்குச் சென்றிருக்கலாம். தளவனூருக்குப் பயணம் சென்றிருக்கலாம். இல்லாவிடில் பல்லவபுரத்துப் பாறைச் சரிவில் சிற்பிகளுடன் திட்டம் வகுத்துக் கொண்டிருக்கலாம் -''

''அரண்மனைக் காவலர்களைச் சாதாரணமாக நினைத்தோம். கலையறிவு இவர்களிடமும் கமழ்கிறதே' பரிவாதினி சிலையென நின்று சிந்தித்தாள்.

''பெண்ணே, பெண்ணே! இங்கே நிற்காதே. அதோ இளவரசர் மாமல்லர் வருகிறார். துடிப்பு மிகுந்தவர். நாங்கள் ஒரு கணம் வீண்பொழுது போக்கினாலும் கடிந்து கொள்வார். உன்னுடன் நாங்கள் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டால் எங்கள் பாடு ஆபத்துதான். மன்னர் வந்தவுடன் வந்துபார்'' என்றனர்.

தந்தப் பல்லக்கில் மகேந்திரன் பட்டத்து அரசியார் வந்தார்கள். அவருகே குட்டிக் குதிரைமீது இளவரசர் நரசிம்மர் கம்பீரமாக ஆரோகணித்து வந்தார்.

'யார் மகேந்திரரா? இல்லை; இல்லை, அவர் குமாரர் தந்தையையே வடித்தெடுத்தது போல் வந்துதித்திருக்கிறார் தனயர் தந்தை மகாபாக்கியசாலி' என்று பரிவாதினி முணுமுணுத்தாள். அவள் இதயத்தில் ஏனோ புரியவியலாத வேதனை முளைத்தது. கால்கள் தள்ளாட அவள் ஏகாம்பர ஈசர் கோயில் பயணியர் சத்திரத்தை அடைந்தாள். அங்கு அவள் உறங்கிய வண்ணம் இருக்கும் போதுதான மகேந்திரவர்மனின் திருப்பணிகளைப் பற்றி அவளால் அறிய முடிந்தது. குடுமியாமலையில் இசைக் கல்வெட்டுகளை மன்னர் படைக்கப் போவதையும், சித்தன்னவாசலைச் சித்திரபுரியாக மாற்றப் போவதையும் பற்றி அவர்கள் பேசிக் கொண்டனர். அங்கு சென்றால் அரசரைத் தடையேதுமின்றிச் சந்திக்கலாம் என்பதறிந்த பரிவாதினி சித்தன்னவாசல் நோக்கிப் பயணமானாள்.

''அப்பப்பா! காஞ்சி மாநகரின் பெருமைதான் என்ன! அதன் சௌந்தர்யத்தில் நான் மயங்கிவிட்டேன். இந்த உலகத்தில் வாழ வேண்டும் என்ற ஆசை எனக்கு அதிகமாயிற்று. சின்னஞ்சிறு வயதில் என் தந்தையுடன் சாளுக்கிய நாட்டிற்குச் செல்லும் போது காஞ்சி வழியே சென்றிருக்கிறேன். அந்த நினைவு இப்போது மங்கிய நிலையில் இருக்கிறது. அப்போது இவ்வளவு பலம் பொருந்திய கோட்டையில்லை. கோயில்கள் இல்லை. மாடமாளிகைகள் இல்லை. இப்போதோ — ஆகா! ஏகாம்பரேச்வரர் ஆலயத்து மணி ஓசையின் நாதமொன்றே போதுமே! மாளிகைகளின் அழகு ஒன்றே போதுமே! அரச குமாரராயிருந்த நீங்கள் பேரரசராகி விட்டீர்கள் என்பதைக் கேள்விப்பட்டேன். அரண்மனை சென்று உங்களைச் சந்திக்க முயன்றேன். அரண்மனையில் உங்கள் பிரதிபிம்பத்தைக் கண்டேன். நீங்கள் இளவயதில் இப்படித்தான் இருந்திருப்பீர்கள் என்பது நீங்கள் திருக்குமாரனைக் காணும்போது



தெரிந்தது. உங்களைக் காண முடியவில்லை. தெற்கே நீங்கள் வெகுதூரம் சென்றிருப்பதாக அறிந்தேன். எப்படியும் உங்களைச் சந்தித்து அந்த ரகசியத்தைத் தெரிவித்து விட வந்து விட்டேன். உங்கள் இலட்சியம் பூர்த்தியடையப் போகிறது. அரசே! கவலையொழியுங்கள்...'' அவள் கரங்கள் நனைந்திருந்தன.

குழந்தை போல கண்ணீருக்கடிமையான தன் கோழைத் தனத்தை ஒரு கணம் எண்ணி வெட்கமுற்ற மகேந்திரன், ரகசியமாய் ''பரிவாதினி! அழியா வர்ணங்களின் ரகசியத்தை அறிந்து வந்திருக்கிறாயா?'' ஆவலுடன் என கேட்டார்.

''ஆம்; அறிந்து வரவில்லை. கொண்டே வந்திருக்கிறேன்...'' என்று பரிவாதினி தன் மடியில் கட்டியிருந்த பையிலிருந்து சிறுசிறு கற்களை எடுத்து அரசர்க்கரசர் முன் நீட்டினாள். சிவப்பு, மஞ்சள், கறுப்பு, பச்சை வர்ணக் கற்கள் அவை -

மகேந்திரன் அவற்றைக் கரங்களில் அள்ளினார். ஆனந்தக் கூத்திடத் தொடங்கி விட்டார். பரிவாதினி அருகேயிருந்த வீணையை எடுத்து மீட்டினாள். அந்த ஒலி கேட்டதும் மகேந்திரன் ஆட்டத்தை நிறுத்தி விட்டு, ''பரிவாதினி, பரிவாதினி! நீ ஆடு; பாடிக் கொண்டே ஆடு. இப்போதுதான் புதுவித வீணையை உருவாக்கி இருக்கிறேன். அதன் நாதம் எப்படியிருக்கிறது. பார்ப்போம்!'' என்றார்.

பரிவாதினியின் கண்களில் புது வெறியிருந்தது; உள்ளத்தில் புத்துணர்வு புகுந்தது. அவள் பாடினாள்:

'திங்கள் மாலை வெண்குடையான்

சென்னி செங்கோல் அது ஓச்சிக்

கங்கை தன்னைப் புணர்ந்தாலும்,

*புலவாய் வாழி! காவேரி!*

*கங்கை தன்னைப் புணர்ந்தாலும்*

*புலவாது ஒழிதல் கயற்கண்ணாய்*

*மங்கை மாதர் பெருங்கற்பு என்று*

*அறிந்தேன் வாழி! காவேரி!'*

அந்த வீணையினின்று அதற்கேற்ப இனிய நாதம் எழுந்தது. எங்கும் அடர்ந்த புதர்களும், சிறுகாடுகளும், பாறைகளும் நிறைந்த பகுதியிலே பாட்டும், பரதமும் நிறைந்தன. மரங்களும் கொடிகளும் செடிகளும் இசையின்பத்தில் மெய் மறந்திருக்கும் போது அருகே மரத்தின் நிழலில் மறைந்திருந்த உருவத்தின் தணல் போன்ற கண்கள் அங்கு நடப்பதைக் கூர்ந்து கவனித்தன.



## 11

காஞ்சி அரண்மனையின் மேல் மாடத்து நிலவு மண்டபத்தில் மகேந்திரவர்மரின் பட்டத்தரசி கவலை தோய்ந்த முகத்துடன் அமர்ந்திருந்தார். அருகே கம்பீரத் தோற்றத்துடன் நரசிம்மவர்மன். உள்ளத்துக் கோபம் முகத்தே பிரதிபலிக்க நின்று கொண்டிருந்தான். தாயின் உத்தரவு என்ன வருமோ எனும் ஆவலும் அவனிடம் இல்லாமலில்லை.

சாளுக்கியர்களின் படைகள் வடபெண்ணையாற்றங் கரையில் தண்டிறங்கியிருக்கின்றன என்ற செய்தி ஒற்றர்கள் மூலம் வந்திருந்தது. அரசர்க்குச் செய்தி போயுங்கூடத் தக்க கட்டளைகள் அவரிடமிருந்து வரவில்லை. அவரைப் பற்றித் தேவியாரிடம் மிகுந்த பயத்துடனே செய்தியை அறிவித்தவர்கள் கூறினார்கள்.

சித்தன்னவாசலில் வர்ண விசித்திரமான ஓவியங்களைத் தீட்டுவதில் மன்னர் ஈடுபட்டிருக்கிறார் என்றும், ஓவியந்தீட்டும் நேரம் போக, மற்றப் பொழுதில் அவர் ஓர் அழகிய இள மங்கையுடன் பொழுதைப் போக்குகிறார் என்றும் அறிந்தவர்கள் கூறினார்கள். தேவி தன் கணவரின் இதயம் பற்றி நன்கறிவாள்; எனினும் யுத்த அபாயம் நெருங்கி வரும் சமயத்தே அவர் காஞ்சியில் இல்லாதிருப்பது சரியன்று என எண்ணினாள். தன் மகன் ஒருவனே போதும் சாளுக்கியப் படைகளை வெல்ல; எனி.னும் மகேந்திரர் சித்தம் எப்படியோ - தேவி ஒன்றும் புரியாது

குழம்பினாள். தானே சித்தன்னவாசலுக்குச் சென்று தந்தையைச் சந்தித்து வரக் கிளம்பினான் நரசிம்மவர்மன்.

சித்தன்னவாசல் மண்டபத்து விதானத்திலே ஓவியங்கள் தீட்டும் பணி தொடங்கிற்று. ஒருவகைக் களிமண்ணால் ஒரு நெல் அளவுக்கு முதலில் பாறைமீது பூசப்பட்டது. பரிவாதினி பலவித நடனத் தோற்றங்களை ஆடிக் காட்டினாள். அவள் முன்பு ஒருமுறை குறிப்பிட்ட நாதாந்த நடனத்தின் தோற்றம் மகேந்திரனுக்கு மிகப் பிடித்திருந்தது. சித்திரசேனன் மஞ்சள் கிழங்கை எடுத்து வரிவடிவமாக அத்தோற்றத்தை வரைந்தான். எந்தெந்த வர்ணத்தை எப்படி எப்படி அமைப்பது என்பதைக் கலந்தாலோசித்தார்கள்.

''நீ கொண்டு வந்தது போன்று இயற்கை வர்ணங்கள் அருகே கிடைப்பதாகத் தெரிவித்தாயே, அதைப் பயன்படுத்தும் காலம் வந்துவிட்டது'' என்று மகேந்திரவர்மர் பரிவாதினியை அழைத்தார். இருவரும் காட்டின் ஒற்றையடிப்பாதையின் வழியே நெடுந்தூரம் சென்றனர். அவர்களைத் தொடர்ந்து பிட்சுவின் வடிவில் இருந்த அந்த சாளுக்கிய ஒற்றனும் மறைந்து மறைந்து சென்றான்.

நாற்புறமும் குன்றுகளால் சூழப்பட்ட அந்த இடத்தில் ஏராளமான சிறு சிறு பாறைகள் பரவிக் கிடந்தன. சிவப்பும், மஞ்சளும், பச்சையுமாக அவை தோற்றமளித்தன. பரிவாதினி அந்த இடத்திற்கு மிகவும் பழக்கப்பட்டவள் போல் வெகு வேகமாகச் சென்றாள். பாறையைத் தாண்டியும் ஏறியும் குனிந்தும் தாவியும் அவள் சென்றது மகேந்திரனுக்கு வியப்பையே அளித்தது. கடைசியாக அவள் சுட்டிய இடத்தை அரசர் கவனித்தார்.



ஆ! இந்த இயற்கை வர்ணத்தைக் கொண்டு மாமல்லபுரத்து மண்டபங்கள் முழுவதையும் வர்ண விசித்திரங்களால் நிறைத்து விடலாமே!

''பரிவாதினி! நீ நிச்சயம் தெய்வப் பிறவிதான்!'' என்று மகேந்திரர் கூறினார்.

பரிவாதினியின் மாந்தளிர்க் கன்னங்கள் வெட்கத்தால் சிவந்தன.

சிறு பாறை ஒன்றை எடுத்து வர்ணக் கற்கள் சிலவற்றைப் பொடியாக்கினாள். எங்கிருந்தோ பச்சிலையொன்றைப் பரிவாதினி கொண்டு வந்து அதன் சாற்றை அதில் பிழிந்தாள்.

இப்போது - வர்ணக் குழம்பு பாறையின் மீது வழிந்தோடியது. சிவப்பும், பச்சையும், மஞ்சளுமாக அவை அந்தப் பாறையில் புதுவித ஓவியத்தையே வரைந்து விட்டதெனலாம்.

வர்ணக் கற்கள் கிடைத்த மகிழ்ச்சியில் பாறையிலமர்ந்து மன்னரும் பரிவாதினியும் வெகுநேரம் பேசிக் கொண்டிருப்பார்கள். மகேந்திரன் மடியில் அவர் கண்டுபிடித்த வீணை துவளும். அதன் கம்பிகள் காற்றின் தழுவலால் மெல்ல ஒலிக்கும். பரிவாதினி நகைக்கும்போது அதுவும் மெல்ல நகும்.

''பரிவாதினி! உனக்கு நினைவிருக்கிறதா? அன்று மழைக் கால வேளையிலே இந்த வீணையை மீட்டத் திணறினேனே'' - மகேந்திரவர்மர் பழைய சம்பவத்தை நினைவுபடுத்தினார்.

பரிவாதினியின் முகம் வெட்கத்தால் சிவந்தது. மூட்டப் பட்ட தீயின் எதிரே அவர் நரம்புகளை மீட்ட, தான் ஆடிய அந்த நடன நினைவு வந்தது. பேரரசர் முன்பு அத்தகைய சிருங்கார நடனத்தை ஆடியிருக்கலாமா? சிரிப்புதான் அவளுக்கு வந்தது.

''ஏன் சிரிக்கிறாய் பரிவாதினி?''

''இல்லை; அன்று ஒரு மரக்கட்டை உங்கள் கையில் படாத பாடு பட்டது. இப்போது பாருங்கள் உங்கள் மடியில் தவழும் இந்தக் கருவியில்தான் எத்தனை அரிய வேலைப்பாடு!''

''ஆம்; மனிதன் வளர்கிறான். அவன் படைப்புகளும் வளரும். எனக்குப் பின்னே வரும் பேரறிஞர்கள் இன்னும் இன்னும் முன்னேற்றங் காண்பர்.''

''அரசே! நீங்கள் இவ்வளவு கலையறிவு பெற்றதெங் ஙனம்? நான் கேட்டது தவறானால் பொறுத்தருள வேண்டும்.''

''நானே கூற வேண்டுமென்றிருந்தேன். நாள்தோறும் நம்மிடையே பலவித யோசனைகள் சொல்லி வருகிறாரே முதியவர் ஒருவர் - அவர்தான் ருத்திராச்சாரியார் - அவர் தாம் எனக்குச் சிற்ப - சித்திர - இசைக்கலையின் குரு. இந்த நரம்புக் கருவிக் குழந்தைக்குப் பாலூட்டியவர் அவரே. கல்வி கற்றுத் தந்தவர் அவர்.''

மகேந்திரன் கூறும்போது உணர்ச்சியால் அவர் நெஞ்சு தழுதழுத்தது.

பரிவாதினி ஏதோ சொல்லத் துடித்தாள். நெஞ்சின் உணர்ச்சியை வெளியிடச் சொல் அகப்படாமல் திணறினாள்.



## 12

மறுநாள் சித்திரம் தீட்டுவதற்குத் தேவையான வர்ணக் குழம்பை எடுத்துக் கொண்டு அவர்கள் மண்டபத்தை வந்தடைந்தனர். அன்றிரவு மகேந்திரனுக்கு உறக்கமே வரவில்லை. புதுப்புதுக் கற்பனைகள் அவர் கண் முன் வந்து நடனமாடின. பின் நிலவாதலால் கூடாரத்தின் வாயிலருகே சந்திரனின் மங்கிய ஒளி வீழ்ந்திருந்தது. அந்த ஒளியில் யாருடைய உருவமோ நிழலாடியது.

''பரிவாதினி!'' என அழைத்த வண்ணம் மகேந்திரன் வெளியே வந்தார்.

காவல் வீரர்கள் உறங்கிக் கொண்டிருந்தனர். மீண்டும் 'பரிவாதினி!' என அழைத்தார்.

வேறு கூடாரத்தில் பரிவாதினி அயர்ந்து உறங்கிக் கொண் டிருந்தாள். 'எவருடைய நிழல் இங்கு உலவியது? பரிவாதினி உறங்குகிறாள் - பின் அது எவர் நிழல்? ஒரு வேளை என் மன நிழலோ?' மனச் சலனத்தைப் போக்க மகேந்திரன் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு வீணையை எடுத்து வைத்துக் கொண்டார். மீட்டினார். திருநாவுக்கரசு அடிகளார் அவர்முன் வந்து நின்றார்.

*''மாசில் வீணையும் மாலை மதியமும்*

*வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்...''*

'ஆகா; அடிகளார் என்ன அற்புதமாக அனுபவித்துப் பாடியுள்ளார்!' என்று எண்ணியவாறு மகேந்திரன் இன்னும் இன்னும் இன்னொலியை எழுப்பினார்.

## 13

காலைப்பொழுது புலரும் நேரம்; சில்லென்று காற்று வீசியது. மதி அரசனும் மறைந்து விட்டான். மகேந்திரன் கண்களைத் துயில் மங்கை தழுவினாள். எவ்வளவு நேரம் தூங்கினோமென்றே மகேந்திரனுக்குத் தெரியவில்லை. காலை கண் விழிக்க முயன்றபோது அவரால் கண் விழிக்க இயல வில்லை. தலை கனத்தது. உடல் முழுவதும் தீயை அள்ளிக் கொட்டியது போன்ற உணர்ச்சி.

அதோ யாரோ அழைப்பது போன்று கேட்கிறதே. காவலர்களா? சமண அடிகளோ? குரு ருத்திராச்சாரியரோ...? இல்லை; இல்லை. அவர்கள் இங்கு ஏன் வருகின்றனர்? அவர்கள் தத்தமது பணியையன்றோ கவனிப்பர்?

பரிவாதினி தான் வந்திருக்கிறாள். அதோ தன் மென்கரத்தால் நெற்றியைத் தொட்டுப் பார்க்கிறாள்.

தடாகத்து அல்லி மலரின் மெல்லிதழ்களால் சாமரம்வீசுவது போன்றிருந்தது அது.

கடலலைகளின் மென்கரங்கள் கொணர்ந்து அர்ச்சிக்கும் கடற் பஞ்சோ அது...!

"அரசோ! உடல் தீயெனக் காய்கிறதே! அதிகாலையில் நீங்கள் இசைத்த உதயகீதம் என் காதுகளில் இன்னும் ஒலிக் கின்றதே! புது ஸ்வர வரிசை நீங்கள் உருவாக்கியதோ...?"

அவள் கேட்கிறாள். மகேந்திரன் பதில் கூற நினைக்கிறார்; முடியவில்லை. உடல் தணலெனக் காய்ந்தது.



பரிவாதினி பதைபதைத்துப் போனாள். காவலர் வந்தனர். சமணப் பள்ளியிலிருந்து மயிற் பீலி கொண்டு மணிமந்திர ஒளடதங்களுடன் சமணத் துறவிகள் வந்தனர். மலைப்பகுதியில் ஏற்படும் நச்சுக் காய்ச்சல் மகேந்திரனைப் பிடித்திருந்தது.

பரிவாதினி மகேந்திரன் அருகே இரவும் பகலும் அமர்ந்திருந்தாள். அவள் தந்தைக்கும் இது போன்றுதான் நச்சுக் காய்ச்சல் வந்தது; அவரைப் பிழைக்க வைக்க அவளால் முடியவில்லை. பல்லவ மண்டலாதிபதிக்கு அது போன்று நேராது - என்றாலும் அவர் சாதாரணக் குடிமகன் போன்று இங்கே வாழ்வதால் அவருக்குத் தக்க வைத்திய உதவி காஞ்சியிலிருந்து வரத் தாமதமாகலாம். அவள் யோசித்தாள். நச்சுக் காய்ச்சலுக்கு கலைநாயகன் பலியாவதா? இதய வேந்தனை நோயரக்கனுக்களிப்பதற்கா பல காததூரம் நடந்து வந்தேன்? முடியாது, முடியாது; அரசரை இறக்க விடமாட்டேன்.

அவள் விரைந்து காட்டை நோக்கி ஓடினாள். பல செடி களைத் தேடினாள். அவள் முகம் மலர்ந்தது. அவள் தேடிவந்த மூலிகை கிடைத்தது. அதை எடுத்துச் சென்று பிழிந்து கொடுத்தாள்.

மகேந்திரன் சுரம் குறைந்தது. பரிவாதினி மகிழ்ந்தாள் - மகேந்திரன் கண் திறந்து பார்த்தார். வாடிய முகத்துடன் சிவந்த கண்களுடன் பரிவாதினி அருகே அமர்ந்திருப்பதைக் கண்டார். அவளுடைய பணிவிடை அவரைக் கவர்ந்தது; தினமும் பரிவாதினி காட்டிற்குச் சென்று பச்சிலை கொண்டு வருவாள். சாறாக்கிக் கொடுப்பாள். ஆனால் நாள்தோறும் அவளைத் தொடர்ந்து ஓர் உருவம் செல்லும். பிட்சு வடிவில் வந்த சாளுக்கிய ஒற்றன் அவன். அவன் நோக்கம்தான் என்ன? பதிவாதினியைக் கவர்ந்து செல்வதா? அல்லது மன்னர் மகேந்திர மன்னனைக் கொல்வதா?

இன்னும் இப்படியே சில நாள்கள். அரசர் எழுந்து உட்கார்ந்து விடுவார். அதுவரை தன் உடற்சோர்வைப் பெரிதாக நினைக்கக் கூடாது என, பரிவாதினி சோர்வின்றிச் செல்வாள்.

## 14

பரிவாதினி வழக்கம்போல் காட்டின் நடுவேயிருந்த அம்மூலிகையின் பச்சிலைச் சாற்றை மந்தாரை இலையினால் செய்யப்பட்ட தொன்னையில் பிழிந்து எடுத்துக் கொண்டு கிளம்பினாள். வழியில் அவளுக்கு நா வறண்டது. அங்கே ஒரு சுனை இருப்பதை அவளறிவாள். பச்சிலைச் சாறு நிறைந்த தொன்னையைப் பாறையின் மறைவில் வைத்துவிட்டுத் தண்ணீர் குடிக்கச் சென்றாள். தக்க தருணம் எதிர்பார்த்திருந்த ஒற்றன் தன் அங்கியின் மறைவில் வைத்திருந்த சிமிழிலிருந்து ஏதோ தூளை எடுத்துப் பச்சிலைச் சாற்றில் தூவினான். பிறகு மறைந்து கொண்டான். தண்ணீர் அருந்திவிட்டு வந்த பரிவாதினிக்கு உடலை என்னவோ செய்வது போலிருந்தது. தலை கனத்துக் கால்கள் தள்ளாடுவன போல் தோன்றின. அரசரைப் பீடித்த நச்சுக் காய்ச்சல் தன்னையும் பீடிக்க வருகிறது என்பதை எளிதில் உணர்ந்தாள். தான் உடல் நோயால் படுத்துவிட்டால் தனக்குப் பணிவிடை செய்ய அரசர் வந்து விடுவார். மாபெரும் பணிகள் உடைய அரசரை அச்செயல் செய்ய விடுவது தகுமா? முன் எச்சரிக்கையாக மூலிகைச் சாற்றைக் குடித்துக் காய்ச்சல் வராமல் தடுப்போம் என்று அரசருக்காகப் பிழிந்து வைத்திருந்த சாற்றைச் சிறிது குடித்தாள். விரைந்து அரசர் இருப்பிடம் நோக்கிச் செல்லத் தொடங்கினாள்.



மூலிகையில் கலந்திருந்த நஞ்சு தன் வேலையைத் தொடங்கியது. காட்டின் எல்லையைக் கடப்பதற்குள் அவள் சுருண்டு விழுந்துவிட்டாள். அவளைத் தொடர்ந்து வந்த ஒற்றன் திடுக்கிட்டான். அவன் ஒன்று நினைக்க வேறொன்றன்றோ நடந்து விட்டது? அவள் எடுத்துச் செல்லும் மூலிகையை மகேந்திரன் குடிப்பான்; நஞ்சு கலந்த அந்த மூலிகை அரசனைக் கொன்றுவிடும் என்று திட்டமிட்டிருந்தான் அந்த ஒற்றன். அதற்காகவே இதுகாறும் அவன் தருணத்தை எதிர்நோக்கி யிருந்தான்.

மகேந்திரன் அன்று முழுமையும் பரிவாதினியைச் சந்திக்க வில்லை; மறுநாள் சுறுசுறுப்பாக எழுந்து விட்டார். 'பரிவாதினி, பரிவாதினி' என அழைத்தார். ஓவியம் தீட்டப்படும் மண்டபம் சென்றார். பரிவாதினி நாட்டியமாடும் தோற்றத்திலுள்ள அந்த ஓவியம் வண்ண விசித்திரங்களுடன் சிறப்பாக விளங்கியது.

'பரிவாதினி எங்கே?' என்று எல்லாரையும் கேட்டார். எல்லாரும் எங்கே எங்கே என்று தேடத் தொடங்கினார்.

குதிரையின் குளம்படிச் சப்தம் அந்தப் பகுதியில் கேட்டது. நரசிம்மவர்மன் குதிரை வீரர்களுடன் தந்தையைக் காண வந்தான். கூடாரத்தில் தந்தையைக் காணாமல், 'எங்கு சென்றிருப்பாரோ' எனத் தேடிப் புறப்பட்ட சமயம்தான் பரிவாதினியின் உடலைக் கண்டுபிடித்து மகேந்திரன்தோளில் சுமந்தபடி வந்து சேர்ந்தார். பரிவாதினியின் உடல் நஞ்சு கலந்ததால் நீலமாக மாறியிருந்தது. வைத்தியர்கள் வந்து பார்த்து கொடிய நாகம் தீண்டி விட்டதென்று தெரிவித்தனர்.

மகேந்திரவர்மன் செயலற்றுப் போனார். அவர் இதய வேதனை கண்ணீராக வடிந்தது. சொல்ல முடியாத உணர்ச்சிகள் கரைந்து கண்ணீராய்ப் பெருகின. அவரால் ஒன்றுமே பேச

முடியவில்லை. சித்தன்னவாசல் குடைவரை மண்டபத்தருகே அவளைப் புதைக்கக் கட்டளையிட்டார். அங்கே ஒரு சிறு லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தார். பரிவாதினி - கலையுள்ளம் படைத்த எழிலரசி. சித்தன்னவாசல் ஓவியந்தீட்ட அவள் கூறிய கருத்துகள் - ஆகா; அல்லிக்குளமும் யானைகளும் - அங்கே ஓர் அரசகுமாரும் அவள் வழங்கிய கருத்தன்றோ? அவை குறிக்கும் செய்தியை மறுநாள் விளக்கிக் கூறுவதாகத் தெரிவித்தாளே! ஒருவேளை அதை அறிந்து வர வானுலகம் நோக்கிச் சென்றிருக்கிறாளோ?

## 15

மகேந்திரவர்மர் யாருடனும் பேசவில்லை. குனிந்த தலையுடன் ஏதோ சிந்தித்த வண்ணமிருந்தார். நரசிம்மவர்மன் ஒன்றும் பேச முடியாமல் அருகே இருந்தான்.

மாலைச் சூரியன் மெல்ல மெல்ல மறைந்து கொண்டிருந் தான். மகேந்திரவர்மன் எழுந்து கூடாரத்திற்குள் சென்றார். வீணையை எடுத்து வந்தார். மெல்ல இசை எழுப்பினார்.

''குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயும்
குமிழ்ச் சிரிப்பும்...''

அந்த இசை எங்கும் பரவியது. கூட்டைத் தேடி வரும் கானப் பறவைகள் ஒரு கணம் அந்த இசையில் மெய்மறந்தன. சமண முனிவர்கள் இசையைச் சிறிது நேரம் அனுபவித்தனர். சித்திரசேனன் மௌனமாக நின்றிருந்தான். நரசிம்மவர்மன் தந்தையின் கரங்களில் தவழும் வீணையை வியப்புடன் நோக்கிய வண்ணமிருந்தான். மகேந்திரன் வீணை மீட்டுவதை நிறுத்தினார்.



''தந்தையே!'' என்று நரசிம்மவர்மன் மெல்லக் கூப்பிட்டான்.

மகேந்திரன் திரும்பிப் பார்த்தார்.

''இது என்ன அப்பா?''

மகேந்திரன் முகத்தில் புன்முறுவல் அரும்பியது. ''குழந்தாய்! இது உன் சகோதரி'' என்றார்.

''என் சகோதரியா?''

''ஆம்; உன் சகோதரிதான்! பரிவாதினி என்று இந்த வீணைக்குப் பெயர் சூட்டியுள்ளேன்.''

''நேற்றுக் கண்டாய் அல்லவா. அற்புத எழிலரசி. கலையரசி! அவள் எனக்குச் செய்திருக்கும் உதவி கொஞ்ச நஞ்சமன்று. அதைவிட இந்த நாட்டுக்குச் செய்திருப்பதோ சொல்லி முடியாது. அதோ! சித்தன்னவாசல் குடைவரை மண்டபத்து ஓவியம் கூறும் - ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கும் அழியாது நம் பெருமையைக் கூறும். ஆனால் அதில் விளங்கும் அழியா வண்ண ரகசியத்தைக் கூறியது யார்? மாமல்லா! அவள் தான் பரிவாதினி! உன் சகோதரி. அவள் இசை வல்லாள்; நாட்டியத்தில் சிறந்தவள்; கலையரசி. அவள் பெயர் என்றும் வாழ வேண்டும். அதனால்தான் என் முயற்சியில் எழுந்த இந்த இசைக் கருவிக்கு அவள் பெயரைச் சூட்டுகிறேன். எனக்காக - என் உயிரைக் காக்கத் தன் உயிரைத் தியாகம் செய்த அவள் பெயர் என்றும் அழியாமல் செய்வோம். வா, இன்றே காஞ்சிக்குக் கிளம்புவோம். நீ வந்த காரியம் நானறிவேன். சாளுக்கியப் படைகள் காஞ்சிக்கு வரும். கவலைப்படாதே. காஞ்சியை நெருங்கியவுடன் சீறிப் பாய்ந்து தாக்கி அழி; என் குரு - முதியவரைக் கொன்ற அந்தப் பொல்லாப் புலகேசினை அழித்து நசுக்கு'' என்று கர்ஜித்தார். பரிவாதினியைக் கொன்றதுகூட

சாளுக்கிய ஒற்றர்தான் என்றறிந்தால் அவர் நிலை எப்படி இருக்குமோ?

குதிரை மீதமர்ந்து நரசிம்மன் முன்செல்ல மகேந்திரன் சித்தன்னவாசலைத் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றார். பரிவாதினி அந்தப் பாறைகளின் மேல் நின்று நடனமாடுவது போல் அவருக்குத் தோன்றியது. பரிவாதினியின் நரம்புகள் தாமே இசையை எழுப்புவது போன்ற ஒரு பிரமை.

''பரிவாதினி! பரிவாதினி!'' என்று அவர் கூவினார். அந்தக் குரல் சித்தன்னவாசல் பாறைகளில் மோதி எதிரொலித்தது. கானகத்து மரங்களில் பட்டு எதிரொலித்தது.

அந்தப் பகுதிக் காற்று அந்தச் சொல்லைக் கொண்டு ஏழுலகமும் சென்றது. பலநூறு ஆண்டுகளுக்கு அழியாதிருக்க வழி செய்தது.

(முற்றும்)

35642
5310275
கொளத்தூர், சென்னை